www.tamilarangam.net

046

# ஈழப்போராட்டம் :
# தேசபக்தியும்
# கம்யூனிஸ்டுகளும்




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

046

# ஈழப் போராட்டம்:
# தேசபக்தியும் கம்யூனிஸ்டுகளும்

☐

ரோசா லக்சம்பர்க் படிப்பு வட்டம்
எம் 23/10 முத்தாலம்மன்
கோயில் தெரு
சென்னை-600 033.

☐

விலை ரூபாய் ஒன்று

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முதற் பதிப்பு : டிசம்பர், 1987
இரண்டாம் பதிப்பு : மார்ச், 1988

## குறிப்பு

ராஜீவ்—ஜெயவர்த்தன ஒப்பந்தத்துக்கும் இந்திய இராணுவத் தாக்குதல்களுக்கும் இந்திய ஆளும் வர்க்கம் கற்பித்த நியாயங்களை மூன்று கட்டங்களாகப் பிரிக்கலாம்:

முதல் கட்டம் : ஒப்பந்தத்தினால் இலங்கைத் தமிழர் கள் தாம் கோரி வந்தவற்றுக்கு மேலதிகமாகவே சலுகை களைப் பெற்றுள்ளனர். இதை நடைமுறைப்படுத்தவே ''அமைதி காக்கும் படை'' இலங்கைக்குச் சென்றுள்ளது.

இரண்டாம் கட்டம் : இந்தியாவின் ''பாதுகாப்பு நலன்களை''க் காக்கவே இந்த ஒப்பந்தம். எனவே அவற்றுக்கு அச்சுறுத்தலாக இருக்கும் விடுதலைப்புலிகளை நிராயுதபாணிகளாக ஆக்குவது அவசியம்.

மூன்றாம் கட்டம் : தென்னாசியப் பிராந்தியத்தில் இந்தியாதான் மேலோங்கிய அரசு. இது அங்கீகரிக்கப் பட்டாக வேண்டும். இந்திய இராணுவம் விடுதலைப் புலிகளை முழுமையாக ஒடுக்காமல் வெளியேறுவது இந்த இராணுவத்தின் கௌரவத்துக்கும் நாட்டின் கௌரவத் துக்கும் பெரும் இழுக்கு ஏற்படுத்தும்.

சுருக்கமாகச் சொன்னால், தனது ஆதிக்க வெறியையும் விஸ்தரிப்புக் கொள்கையையும் இந்திய ஆளும் வர்க்கம் இன்று வெளிப்படையாகவே ஒப்புக்கொள்கிறது.

இந்த மூன்று கட்டங்களிலுமே இந்திய ஆளும் வர்க்கத் தின் நியாயங்களையே சி. பி. ஐ, சி, பி. ஐ (எம்) கட்சித் தலைமைகள் ஆதரித்துள்ளன. உண்மையான கம்யூனிச சித்தாந்தத்தையும் தர்ம நியாயங்களையும் ஏற்றுக் கொண்டுள்ள ஏராளமான கட்சி உறுப்பினர்களின் உள்ளக் குமுறல்களை இக்கட்சித் தலைமைகள் பொருட்படுத்த வில்லை. ஆனால் இந்தத் தலைமைகளால் மறுதலிக்க முடியாத இப்பிரசுரம் பரவலான ஆதரவைப் பெற்றுள்ள தால் இதன் இரண்டாவது பதிப்பை வெளியிடுவதில் பெரும் மகிழ்ச்சியடைகிறோம்.

**தொகுப்பாளர்கள்**

## முன்னுரை

1987 ஜூலை மாதம் 29 ஆம் நாள் இந்திய அரசின் பிரதமர் ராஜீவ் காந்தியும் இலங்கை ஜனாதிபதி ஜெய வர்த்தனவும் செய்துகொண்ட இலங்கை-இந்திய ஒப்பந்தத் தை அடுத்து இந்திய ''அமைதி காக்கும் படை'' அங்கு சென்று விடுதலைப் புலிகளிடமிருந்து ஆயுதங்களைப் பறித் தல் என்ற பெயரில், ஈழத் தமிழ் மக்கள்மீது ஒரு முழுமை யான யுத்தத்தைக் கட்டவிழ்த்துவிட்டுள்ளது. இது குறித்த பல்வகையான வாதப் பிரதிவாதங்களும் ஒரு மிக அடிப் படையான உண்மையைப் பின்னுக்குத் தள்ளிவிட்டன. இலங்கைப் பிரச்னையில் பிரதானமாக பாதிக்கப்பட்டவர் கள் அங்குள்ள தமிழ் மக்கள் தான்; எந்தவொரு ஒப்பந்தமும் பாதிக்கப்பட்டவர்களின் பிரதிநிதிகளால் கையெழுத்திடப் பட்டிருக்க வேண்டுமேயன்றி, ''நடு நிலை'' யாளன் என்று இது நாள் வரை தன்னைக் கூறிக்கொண்டு வந்திருப்பவரால் அல்ல என்பதுதான் அது.

கடந்த நான்காண்டுகளாக இலங்கையில் ஏற்பட்டுள்ள இனப்பிரச்சனைக்குத் தீர்வுகாண முயற்சிகளை மேற்கொண் டிருப்பதாகக் கூறிவந்த இந்திய அரசு, திடீரென்று ஜூலை யில் தனக்கும் இலங்கை அரசுக்குமிடையே ஓர் ஒப்பந்தத் தைச் செய்துகொண்டது. இப்பிரச்சினையில் பிரதானமாகப் பாதிக்கப்பட்டவர்களைத் தனது ஒப்பந்தத்துக்கு அடி பணிந்து போக வேண்டுமென்று வற்புறுத்துகிறது. இதற்காக ஈழத்தில் அது ஓர் அடாவடிப்போரில் இறங்கியுள்ளது. இவற்றையெல்லாம் ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் மட்டுமல்லாது, கம்யூனிஸ்டுகள் எனக் கூறிக்கொள்பவர் களும் ''தேசபக்தி'', ''தேசப் பாதுகாப்பு'', ''இந்துமா சமுத்திரத்தில் அமெரிக்காவின் செல்வாக்குப் பரவுவதைத்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தடுத்து நிறுத்துதல்'' ''இலங்கையிலிருந்து இந்தியாவின் பாதுகாப்பு நலன்களுக்கு வரும் அச்சுறுத்தலை அகற்றுதல்'' என்ற பெயர்களில் நியாயப் படுத்துகிறார்கள்.

இலங்கை அரசு, திருகோணமலையில் உள்ள துறைமுகத்தை இந்தியாவின் நலன்களுக்குக் குந்தகம் விளைவிக்கும் வகையில் பிற நாடுகள் பயன்படுத்துவதை அனுமதிக்காது; இலங்கையிலுள்ள வாய்ஸ் ஆப் அமெரிக்கா வானொலி நிலையம் இந்தியாவுக்கு எதிரான பிரச்சாரம் செய்ய அனுமதிக்கப்படாது என்ற இரு விஷயங்கள் ஒப்பந்தத்தில் இருப்பதாகவும், இவை இந்தியாவின் ''ஏகாதிபத்திய எதிர்ப்பு'' நோக்கத்தைப் பூர்த்தி செய்வதாகவும் சில ''கம்யூனிஸ்டுகள்'' எழுதியும் பேசியும் வருகிறார்கள்.

இதைவிட அப்பட்டமான மோசடி எதுவும் இருக்க முடியாது. ஏனெனில் இந்த விஷயங்கள் இந்திய—இலங்கை அரசுகள் செய்து கொண்ட ஒப்பந்தத்திலோ, அதன் பிற்சேர்க்கையிலோ (annexure) இல்லை! ஒப்பந்தத்திலும், பிற்சேர்க்கையிலும் குறிப்பிடப்பட்ட விஷயங்கள் மட்டுமே ஜூலை 29 முதல் நடைமுறைக்கு வரும் என்று ஒப்பந்தம் தெளிவாகக் கூறுகிறது!

திருகோணமலை, வாய்ஸ் ஆப் அமெரிக்கா விஷயங்கள் ஜூலை 29 இல் ராஜீவ்காந்தி ஜெயவர்த்தனவுக்கு எழுதிய கடிதத்தில் மட்டுமே காணப்படுகின்றன. இவற்றையும் வேறு சிலவற்றையும் சேர்த்து ''set of agreement reached between us'' என்று குறிப்பிடும் ராஜீவ்காந்தி அவற்றை உறுதி செய்யுமாறு ஜெயவர்த்தனவிடம் கேட்கிறார். இங்கும்கூட தமது குள்ளநரித்தனத்தைக் காட்டும் ஜெயவர்த்தன, தனது பதில் கடிதத்தில் ''I confirm the understanding reached between us'' என்று எழுதுகிறார்! agreement என்பதற்கும் understanding என்பதற்கும் உள்ள வேறுபாட்டை அரசியல் நிபுணர்களும் சட்ட ஆலோசகர்களும் நன்கு அறிவார்கள்!



மேலும் இந்த இரண்டு விஷயங்களுக்கும் ஒப்பந்தத்துக்கும் சம்பந்தமில்லையென்றும், திரிகோணமலை, வாய்ஸ் ஆப் அமெரிக்கா மட்டுமின்றி மொசாத் போன்ற இஸ்ரேலிய படைகளை இலங்கை அரசாங்கம் வைத்திருப்பது என்ற விவகாரம்கூட இலங்கை அரசாங்கத்தால்தான் முடிவு செய்யப்படுமே அன்றி, இந்தியாவிற்கு இவற்றில் தலையிட உரிமையில்லை என்றும் இலங்கையின் முக்கிய அமைச்சர்களில் ஒருவரான காமினி திசநாயக சென்ற நவம்பர் 15 அன்று பேசியுள்ளார். (அடுத்த நாள் இந்திய நாளேடுகளில் இச்செய்தி வெளிவந்துள்ளது.)

20 லட்சம் ஈழத்தமிழர்களாலோ 3000 விடுதலைப்புலிகளாலோ இந்தியாவின் பாதுகாப்பு நலன்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படும் என்று 75 கோடி மக்களையும் 60 லட்சம் இராணுவத் துருப்புக்களையும் கொண்டுள்ள இந்தியா கூறுவதும் அதை வெட்கமில்லாமல் சில கட்சிகள் பிரசாரம் செய்வதும் கிரனடா என்ற குட்டித்தீவை அமெரிக்க ஏகாதிபத்தியம் சில ஆண்டுகளுக்கு முன்பு ஆக்கிரமிப்பு செய்தது போன்ற வெட்கக்கேடான செயல்தான்.

''பாதுகாப்பு நலன்கள்'' (Security interests) என்ற முழக்கத்தின் கீழ்தான் ஏகாதிபத்திய நாடுகள் தங்கள் விரிவாக்க நோக்கத்தை நிறைவு செய்து வந்துள்ளன. சோசலிச நாடுகளும்கூட தமது தவறான நடவடிக்கைகள் சிலவற்றை நியாயப்படுத்த இந்த முழக்கத்தைப் பயன்படுத்தியதுண்டு.

''பாதுகாப்பு நலன்கள்'' என்ற பெயரின் கீழ் இன்று இந்தியப் படைகள் ஈழமண்ணில் நடத்திவரும் அநியாயமான யுத்தத்துக்கு ராஜீவ் அரசே பொறுப்பு. மிகச் சாமானியர்களின் குடும்பத்தில் பிறந்த நமது இராணுவத்தினர் நியாயமற்ற முறையில் பலியாக்கப்படுகிறார்கள். இதைத் தடுத்து நிறுத்துவதுதான் உண்மையான தேசபக்தியாகும்.

''கம்யூனிஸ்டுகள்'' என்று தம்மை அழைத்துக் கொள்பவர்களின் பேச்சுக்களிலும் எழுத்துக்களிலும் தேசிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வெறியையே நாம் காண்கிறோம். இந்திய ஆளும் வர்க்கத்தின் தேசிய வெறிதான் அது.

நம் நாட்டு ஆளும் வர்க்கத்தை ''தேசிய முதலாளிகள்'' ''பெருமுதலாளிகள்'', ''தரகு முதலாளிகள்'' என்று வெவ்வேறு வகையாக வெவ்வேறு கம்யூனிஸ்ட் கட்சிகள் அழைக்கின்றன. ஆனால் அது ஒரு முதலாளித்துவ வர்க்கம் தான் என்பதில் யாருக்கும் ஐயமில்லை. இப்படியிருக்க முதலாளித்துவத்தின் ''தேசிய நலன்'' களும் இந்தியப் பாட்டாளி வர்க்கத்தின் தேசியநலன்களும் ஒன்றுபட்டுள்ளன என்று கூறுவது அப்பட்டமான மோசடியாகும்.

மேலும், இந்திய அரசோ, இந்திய இராணுவமோ இலங்கையில் எதிர்த்துப் போராடுவது அமெரிக்க ஏகாதிபத்தியத்தை அல்ல; அதன் அடிவருடியான ஜெயவர்த்தனவுக்கு உதவும் பொருட்டு, இதுவரை ஜெயவர்த்தனவின் நவீனக் காலனியரசின் படைகளையும், இஸ்ரேல் மற்றும் பிற கூலிப்படைகளையும் எதிர்த்து நின்ற ஈழமக்களையும் அவர்களது பிரதிநிதிகளான விடுதலைப்புலிகளையும்தான்!

இலங்கை முழுவதையும் இந்தியஅரசு கைப்பற்றினாலும் கூட, அது அமெரிக்காவின் செல்வாக்கைத் தடுத்து நிறுத்தும் என்ற வாதத்தை நாம் ஒப்புக்கொண்டாலும் கூட, இது இந்தியாவின் பாதுகாப்பை உத்தரவாதம் செய்துவிடாது. ஏனெனில், இந்துமாசமுத்திரத்தில் டீகோ கார்சியாவிலுள்ள ஒரே ஒரு கப்பற்படைத்தளத்திலுள்ள போர்க்கப்பல்களும் நீர்மூழ்கிக் கப்பல்களுமே இந்தியாவை முறியடித்துவிடும் ஆற்றல் உள்ளவை. மேலும் இந்திய அரசு அமெரிக்க ஏகாதிபத்தியத்தை எதிர்ப்பதாகவே இருந்தாலும், அதற்காக இலங்கையில் வாழும் தமிழர்கள் மற்றும் சிங்களவர்களது அடிப்படை உரிமைகளைப் பலிகொடுத்துவிட்டுத்தான் அதைச் செய்வதா என்ற மிக முக்கியமான கேள்விக்கும் இந்தக் ''கம்யூனிஸ்டுகள்'' பதில் சொல்ல வேண்டும்.



சோசலிச முகாமிலுள்ள நாடுகளின் பாதுகாப்புக்காக இந்திய அரசின் செயல்களை ஆதரிக்கிறோம் என்று கூறுபவர்களுக்கும் இந்தக் கேள்வி பொருந்தும்.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் செல்வாக்கையும், ஊடுருவலையும் தடுத்து நிறுத்த ஒரே வழி, பாம்புக்கு வாலும் மீனுக்குத் தலையும் காட்டி வருகிற இந்திய ஆளும் முதலாளி வர்க்கத்தையும் அதன் அடிவருடிகளையும் தோற்கடித்து, இந்தியாவில் உண்மையான சோசலிசத்தை நிறுவுவதும் மக்களின் கைகளில் அதிகாரங்களை ஒப்படைப்பதும்தான்.

இந்தக் கண்ணோட்டத்தில்தான் ''இல்லஸ்ட்ரேட் வீக்லி ஆப் இந்தியா'' டிசம்பர் 6 தேதியிட்ட இதழில், அச்சின் வானய்க் என்பார் எழுதியுள்ள கட்டுரை மிகுந்த கவனத்துக்குரியதாகிறது. ''தேசப் பாதுகாப்பு'', ''தேசிய நலன்கள்'', ''பாதுகாப்பு நலன்கள்'' என்பனவற்றுக்குள் மறைந்துள்ள ஆதிக்க வெறியை அம்பலப்படுத்தும் கட்டுரை இது. இந்திய பொதுவுடைமை இயக்கத்திலுள்ள உண்மையான கம்யூனிஸ்ட்டுகள் தங்களை இந்திய முதலாளிய வர்க்கத்தின் ''தேசிய வெறி'' யிலிருந்து விடுவித்துக் கொள்ள உதவும் கட்டுரை இது. இக்கட்டுரையாசிரியர் பற்றி நமக்கு ஒன்றும் தெரியாது. ஆனாலும் கட்டுரையின் உள்ளடக்கத்திலுள்ள நியாயம் நமக்குத் தெரிகிறது.

இக்காரணம் கருதியே நாம் இக்கட்டுரையை மொழியாக்கம் செய்து வெளியிடுகிறோம்.

இக்கட்டுரையின் பிற்சேர்க்கையாக லெனினின் ஒரு கட்டுரையிலிருந்து சில பகுதிகள் தரப்படுகின்றன. முதலாம் உலகப்போரின் போது, ''இரண்டாவது அகிலத்'' தில் இருந் பெரும்பான்மையான மார்க்சியத் தலைவர்கள், தத்தம் நாட்டு முதலாளிய வர்க்கங்களுக்கு ''தாய்நாட்டின் பாதுகாப்பு'' என்ற பெயரால் ஆதரவளித்தபோது, இத்தகையவர்களே அந்த அகிலத்தின் பெரும்பான்மையான வர்களாக இருந்தபோது, லெனின் எழுதிய கட்டுரைஅது.

டிசம்பர் 21, 1987 — தொகுப்பாளர்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இந்திய இராணுவம் இலங்கையில் நிலை கொண்டிருப்பது ஏன்?

—அச்சின் வானய்க்

உலகிலுள்ள வல்லரசுகள் தமது அயலுறவுக் கொள்கைகளையும் அவற்றின் அடிப்படையிலான ஆக்கிரமிப்புச் செயல்களையும் ''பிராந்திய அமைதி மற்றும் பாதுகாப்பு'' என்ற பெயரிலேயே நியாயப்படுத்தி வந்துள்ளன. பெரும்பாலும் இந்த நாடுகளின் அயலுறவுக் கொள்கைகள் உண்மையில் அவற்றின் ஆதிக்க உணர்வையே வெளிப்படுத்தியுள்ளன. ''பிராந்திய அமைதி மற்றும் பாதுகாப்பு'' என்பன உண்மையில் இந்த நாடுகளை ஆள்பவர்களின் ஆதிக்க உணர்வையே குறிக்கின்றன! சில சமயங்களில் இவ்வகையான செயல்கள் ''உலக அமைதி மற்றும் பாதுகாப்பு'' என்ற பெயரிலுங்கூட வெளிப்படலாம்.

இந்திய அரசு இலங்கைப் பிரச்சினையில் தான் நடந்து கொண்டு வந்துள்ள முறையை, இதற்கு முன்பு அமெரிக்க மற்றும் சோவியத் வல்லரசுகள் பல பிரச்சினைகளைக் கையாண்ட முறைகளுடன் ஒப்பிட முடியும். இவ்வகையில், புதுடெல்லியிலுள்ள அமெரிக்கத் தூதுவர் அண்மையில் சில இந்தியப் பத்திரிகையாளர்களிடம் கூறியுள்ளதையும் நினைவுபடுத்திப் பார்க்க வேண்டும்: ''இந்தியாவுக்கு வயது வந்து விட்டது! இலங்கைப் பிரச்சினையில் இந்திய அரசு எடுத்த நிலைப்பாட்டால், அது தன்னை ஒரு பிராந்திய வல்லரசாக



மாற்றிக்கொண்டு விட்டது. அமெரிக்க அரசு இந்திய அரசின் நிலைப்பாட்டை முழுமூச்சுடன் ஆதரிக்கிறது'' என்பதே அவரது கூற்றாகும்.

உண்மையில், இந்திய அரசு, தான் ஜனாதிபதி ஜெயவர்த்தனவுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தை இலங்கைத் தமிழர்கள்மீது திணித்துள்ளது; இதையடுத்து, தமிழீழ விடுதலைப்புலிகள் (LTTE) அமைப்பைத் தாக்குவதற்கு இந்திய இராணுவத்தை ஏவிவிட்டுள்ளது. இந்திய அரசின் இச்செயல்களை ஆதரிப்பவர்கள் இருவகைப்படுவர்:

இந்திய அரசானது தென்னாசியப் பிராந்தியத்தில் தனது மேலாதிக்கத்தை ஒருவாறு நிலைநிறுத்திவிட்டதாகப் பெருமைப்படுபவர்கள் முதல் வகையினர். இவர்களுக்கு இலங்கைத் தமிழர்களின் ஜீவாதார உரிமைகளைப் பற்றியோ, அவை பாதுகாக்கப்பட வேண்டியதற்கான நியாயங்கள் பற்றியோ எந்தவிதக் கவலையுமில்லை. இந்திய அரசு தன்னை நியாயப்படுத்திக் கொள்வதற்காகச் செய்துவரும் பிரச்சாரத்திலேயே திருப்தி கண்டு விடுபவர்கள் இவர்கள்.

இந்திய அரசின் செயல்கள் இலங்கைத் தமிழர்களின் உரிமைகளுக்காகத்தான் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று தமக்குத் தாமே கூறிக்கொள்பவர்கள் மற்றொரு வகையினர். அதாவது, இந்திய அரசு இலங்கைத் தமிழர்களின் நலன்களைக் கருத்தில் கொண்டே இவ்வளவு தூரம் செயல்பட்டுள்ளது (அல்லது செயல்பட வேண்டி வந்தது) என்று உண்மையாகவே இவர்கள் நம்புகிறார்கள்.

முதல் வகையினரைப் பொறுத்தவரை, இந்திய அரசு ''இந்தியாவின் நலன்கள்'' என்று எதையெதை வரையறுத்துள்ளதோ, அவையே இவர்களுக்கு முதன்மையானதாகும். இலங்கைத் தமிழர்களின் ஜீவாதார உரிமைகளை இவர்கள் ஒதுக்கி விடுகின்றனர். இந்திய மக்களாகிய நாம் இவர்களை வன்மையாக எதிர்க்க வேண்டும். இவர்கள் தாமே அம்பலப்பட்டுப் போய்விடுவதால், ''தேசபக்தி'' என்பதன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பெயரால் இவர்கள் கட்டவிழ்த்துவிடும் பொய்களையும் ஏமாற்று வித்தைகளையும் நாம் இனங்கண்டு கொள்ள இது உதவும்.

இரண்டாவது வகையினர் தம்மைத் தாமே ஏமாற்றிக் கொள்பவர்களாவர். இவர்களின் மாய்மாலத்தை அம்பலப் படுத்துவதும் நமது கடமையாகும்.

□ □ □

எந்தவொரு அரசியல் பிரச்சினையை ஆராயும்போதும் நாம் முதலில் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டியது, அப் பிரச்சினையில் வரலாற்று ரீதியாகப் பிரதானமாகப் பாதிப் புக்கு ஆளாகியுள்ள மக்கள் யார் என்பதைத்தான். பிற பிரச்சினைகள் எப்படியிருந்தாலும் சரி; இலங்கைப் பிரச்சினையைப் பொறுத்தவரை, பாதிக்கப்பட்டவர்கள் இலங்கையின் தமிழ் மக்கள்தாம் என்பதில் நமக்கு எவ்வித சந்தேகமும் இருக்க முடியாது. சிறிமாவோ பண்டாரநாயக வின் அரசாக இருந்தாலும் சரி, ஜெயவர்த்தனவின் அரசாக இருந்தாலும் சரி, இலங்கை அரசின் அரசியல், கல்வி, பொருளாதார, கலாச்சார மற்றும் பல்வகை அடக்குமுறை களுக்கு உள்ளாக்கப்பட்டு வந்துள்ளவர்கள் அந்நாட்டின் தமிழர்கள்தான். இந்நிலை முப்பதாண்டுகளுக்கும் மேலாக நீடித்து வருகின்றது.

அரசியல், சமூக நீதி மற்றும் ஜனநாயக உணர்வுள்ள யாருமே, எந்த ஒரு பிரச்சினையிலும் வரலாற்று ரீதியாக அடக்குமுறைக்குப் பிரதான இலக்காகியுள்ள மக்களின் நலன் களே தலையாயது என்று கருதுவர். இதை விடுத்து, பிரச்சினை யில் தொடர்பு கொண்ட மற்றவர்களின் நலன்களை முதன்மைப்படுத்துவது, பாதிக்கப்பட்ட மக்களுக்கு இழைக்கப் படும் துரோகமாகவே சென்று முடியும். இதில் எள்ளளவும் ஐயமில்லை.

எனவே இலங்கைப் பிரச்சினையைப் பொறுத்தவரை, இதற்கு ஒரு தீர்வு என்று பேசும்போது இலங்கைத் தமிழர்



களின் நலன்களே தலையாயதாக அமையும்! இதற்கு மாறாக இந்திய அரசின் நலன்களோ, இலங்கை அரசின் நலன்களோ, இனவெறிக்கு உள்ளாக்கப்பட்ட சிங்களவரின் நலன்களோ, தமிழக அரசின் நலன்களோ, ஏன் தமிழ் நாட்டு மக்களின் நலன்களோகூடத் தலையாயதாக இருக்க முடியாது; அவ்வாறு வேறு எதையும் முதன்மைப்படுத்தவும் முடியாது.

மேற்கூறிய அரசியல் சக்திகளின் நலன்களை ஒதுக்க வேண்டும் என்று நாம் இங்கே கூறவில்லை. ஆனால் இலங்கைத் தமிழர்களின் நலன்களைவிட, இவற்றில் எந்த வொரு அரசியல் சக்தியின் நலன்களையும் முதன்மைப் படுத்துவது என்பது இலங்கைத் தமிழர்களுக்கு இழைக்கப் படும் துரோகமாகும்; அரசியல், சமூக நீதிக்கும் ஜன நாயகத்துக்கும் விரோதமாகும்.

மேலும், இலங்கைத் தமிழர்களுடைய பிரதிநிதிகள் மூல மாகவே அவர்களுடைய நலன்களும் அரசியல் அபிலாசை களும் பிரதிபலிக்கப்பட வேண்டும். இலங்கைத் தமிழர்களின் அமைப்புகளில் சில "சரியான" அல்லது "மோசமான" அரசியல் அமைப்புகளாக இருக்கலாம்; அவற்றின் கோரிக்கை களுடன் இலங்கைத் தமிழரல்லாதவர்கள் மாறுபட்டு நிற்க லாம். ஏன் இந்திய அரசேகூட இவ்வமைப்புகளைத் தம் கோரிக்கைகளை மாற்றிக் கொள்ளுமாறும் வலியுறுத்தலாம்; இவ்வமைப்புகளில் தான் "சரி" என்று கணிக்கும் அமைப்பையே தேர்ந்தெடுத்து ஊக்குவிக்கவும் செய்யலாம்.

ஆனால் இலங்கைப் பிரச்சினையால் வரலாற்று ரீதியாக முதன்மையாகப் பாதிக்கப்பட்டிருக்கும் இலங்கைத் தமிழரல் லாத வேறொரு சக்தியான இந்திய அரசு, அவர்கள்மீது தனது "தீர்வைத்" திணிப்பதையே நாம் இங்கு நடைமுறை யாகக் காண்கிறோம். இந்திய அரசைப் பொறுத்தவரையில் இலங்கை அரசுடன் தனக்குள்ள கருத்து வேறுபாடுகளை உடனடியாகத் தீர்த்துக்கொள்ளும் நிர்ப்பந்தங்கள் அதற்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இருக்கக்கூடும்; தனக்குச் சாதகமானதொரு ''தீர்வை'' உடனடியாக நடைமுறைப்படுத்தவும் இந்திய அரசு விரும்பி யிருக்கக் கூடும்.

**அதாவது, இலங்கைத் தமிழர்கள் தமக்கான அரசியல் எதிர்காலத்தைத் தாமே தேர்ந்தெடுத்துக் கொள்ளும் உரிமையை (சுய நிர்ணய உரிமையை) மறுதலித்து விடுவது என்பதுதான் இங்கே நடந்துள்ளது. இதைத்தான் நாம் எதிர்க்கின்றோம்.**

இலங்கைத் தமிழர்களது அரசியல் எதிர்காலமானது அவர்களது பிரதிநிதி அமைப்புக்கள் மூலமாகவே நிர்ணயிக்கப் படக் கூடியதாகும். இந்த அடிப்படையான அரசியல் உண்மையைக்கூட இங்கு நாம் சுட்டிக்காட்ட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். ஏனெனில், இந்திய அரசின் தற்போதைய செயல்களை விமரிசிப்பவர்கள்கூட தமிழீழம் குறித்த இந்திய அரசின் நிலைப்பாட்டை விமரிசிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மீண்டும் மீண்டும் நாம் சுட்டிக்காட்ட விரும்புவது என்னவென்றால்—இந்திய அரசு தமிழீழம் அமைவதை ஏற்கலாம் அல்லது நிராகரிக்கலாம்; அப்படிச் செய்வது இந்திய அரசின் உரிமையாகும். அதற்கான பல்வேறு நியாயங்களும் காரணங்களும் இந்திய அரசுக்கு இருக்கக் கூடும்.

ஆனால் ''தமிழீழம் அமைவதைத் தடுத்தே நிறுத்து வோம்'' என்று பறைசாற்றிச் செயல்பட இந்திய அரசுக்கு எவ்வித உரிமையும் கிடையாது. இனியும் இலங்கை அரசின் இனவெறிக் கொள்கையைப் பொறுத்துக்கொண்டு வாழ முடி யாது என்று இலங்கைத் தமிழர்களில் பெரும்பான்மையினர் முடிவெடுத்து விட்டதால், இந்திய அரசு அவர்களது முடிவை மாற்றிக் கொள்ளுமாறு வலியுறுத்த மட்டுமே செய்யலாம். ஆனால் ''எது நடந்தாலும் சரி, தமிழீழம் அமைவதை



நாங்கள் தடுத்து நிறுத்துவோம்'' என்று கூறுவதற்கு இந்திய அரசுக்கு எந்தவித உரிமையுமில்லை.

இந்திய அரசின் ''உரிமை'' என்பது இங்கு என்னவாக இருக்கிறது? தென்னாசியப் பிராந்தியத்திலேயே சக்தி வாய்ந்த அரசான இந்திய அரசு, தனது நலன்கள் என்று தான் கருதுவனவற்றுக்காக, இப்பிரச்சினையால் முதன்மை யாகப் பாதிக்கப்பட்டவர்களான இலங்கைத் தமிழர்களது உரிமைகளைப் புறக்கணிப்பதாகவே இந்த ''உரிமை'' உள்ளது. ''இந்திய அரசின் நலன்களே தலையாயது'' என்ற இறுமாப்பான கொள்கை, இலங்கைத் தமிழர்கள்மேல் இந்திய அரசுக்குள்ள எரிச்சலையும், வெறுப்புணர்வையுமே உணர்த்துவதாக உள்ளது. இந்த வெறுப்புணர்வு பல சமயங்களில் வெளிப்பட்டுள்ளது என்பதையும் நாம் சுட்டிக் காட்ட வேண்டும்.

இந்திய அரசானது தான் இலங்கையுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தை, தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி (TULF) உள்ளிட்ட **அனைத்து** இலங்கைத் தமிழர் அமைப்புகள் மீதும் **திணித்தது** என்பது வியப்புக்குரியதல்ல! தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பானது ஒப்பந்தத்தை யும் ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்படும் விதத்தையும் கடுமையாக எதிர்த்து வந்ததை அடுத்து, இந்திய அரசு, தன்னால் திணிக்கப்பட்ட ஓர் ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ளாததற்காக விடுதலைப்புலிகளை அழித்தொழிக் கிறது; இந்த அடாவடிச் செயலைத் தன் போக்கில் நியாயப் படுத்தவும் செய்கிறது.

□ □ □

இந்திய அரசு ஏன் இத்தகைய ஒப்பந்தத்தைச் செய்து கொண்டது? மேலும் (இலங்கைப் பிரதமர் ரணசிங்கே பிரேமதாசா சரியாகவே கணித்துள்ளதுபோல்) விடுதலைப் புலிகளை ஒரு காலகட்டத்தில் வளர்த்தெடுத்த இந்திய அரசே ஏன் தற்போது அவ்வமைப்பை அழிக்க முற்படுகிறது?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இக்கேள்விகளுக்குப் பதில் கூறும் முன்பு, நாம் ஒரு முக்கியமான வரலாற்று உண்மையை நினைவுப்படுத்திக் கொள்ள வேண்டும்—இலங்கைத் தமிழர்களது நலன்கள் பற்றி இந்திய அரசுக்கு எந்தவித அக்கறையும் இருந்ததில்லை என்பதே அது! இதற்கான முக்கியமான ஒரு சில ஆதாரங்களை மட்டும் இங்கே சுட்டிக்காட்டிட விரும்புகிறேன்.

1. கடந்த முப்பதாண்டுகளுக்கும் மேலாகவே இலங்கையின் பூர்வீகத் தமிழ் மக்களும், பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் நாட்டிலிருந்து தேயிலைத் தோட்டங்களில் உழைப்பதற்காக பிரிட்டிசாரால் கொண்டு செல்லப்பட்டவர்களான மலையகத் தமிழர்களும், இலங்கை அரசால் கடுமையான அரசியல், பொருளியல், கலாச்சார அடக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்டவர்கள். இந்த அடக்குமுறைகள் படிப்படியாக நியதியாகி விட்டன. ஆனால், இலங்கைத் தீவு இந்தியாவுக்கு மிக அருகில் இருந்தும், இந்திய—இலங்கைத் தமிழர்களிடையே மிக நெருக்கமான உறவுகள் இருந்தும், இந்திய அரசு இலங்கைத் தமிழர்களின் உரிமைகளைப் பற்றி ஆக்கப்பூர்வமாக எதுவுமே பேசியதில்லை, செய்ததுமில்லை.

2. 1964 ஆம் ஆண்டில் இந்தியப் பிரதமராயிருந்த லால் பகதூர் சாஸ்திரியும் அந்நாளைய இலங்கைப் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயகவும் வெட்கக்கேடான ஓர் ஒப்பந்தத்தைச் செய்து கொண்டனர். இதன் மூலம் இலங்கையரசு 1948-ஆம் ஆண்டில் மலையகத் தமிழர்களின் குடியுரிமையைப் பறித்து அவர்களை நாடற்றவர்களாக்கிய கொடுஞ்செயல் நியாயப்படுத்தப்பட்டது. மாறாக, இலங்கையில் பிறந்து வளர்ந்த மலையகத் தமிழர்களில் ஒரு பகுதியினரை நாடு கடத்தும் கொடிய திட்டம் முன் வைக்கப்பட்டு, மற்றொரு பகுதியினர்க்குக் காலப்போக்கில் வாக்குரிமை அளிக்கப்படும் என்ற கீழ்த்தரமான பேரம் ஒப்பந்தமாகக் கையெழுத்திடப்பட்டது.



பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு பிரிட்டிஷ் பாசிசக் கட்சியான தேசிய முன்னணியின் (National Front) தலைவரான மார்ட்டின் வெப்ஸ்டர் என்பவரும் வெள்ளை இனவெறித் தலைவரான எனோச் பவல்லின் ஆதரவாளர்கள் பலரும் பிரிட்டனில் வாழும் ஆசிய இனத்து மக்களைக் கட்டாயமாக நாடு கடத்த வேண்டும் என்று வலியுறுத்திப் பிரச்சாரம் செய்த போது சிறிமாவோ—சாஸ்திரி ஒப்பந்தத்தை "ஒரு சரியான முன்னோடி" எனக் குறிப்பிட்டனர்.

இலங்கை அரசைப் பொறுத்தவரை இந்த ஒப்பந்தத்தின்படி தான் செய்ய வேண்டிய குறைந்தபட்சக் கடமைகளைக் கூட அது நிறைவேற்ற முன்வரவில்லை. நாடு கடத்தப்படாத மலையகத் தமிழர் அனைவருக்கும் இன்னும் குடியுரிமை வழங்கப்படவுமில்லை.

இவ்வாண்டு இலங்கை - இந்திய அரசுகளிடையேயான ஒப்பந்தத்தில் கூட மீண்டும் மலையகத் தமிழர்கள் "இந்தியர்" களாகக் குறிக்கப்பட்டு, நாடு கடத்தப்படும் அவலம்தான் நிகழ்ந்துள்ளது. இந்தக் கொடுமையானது இலங்கையரசின் கண்டனத்துக்குரிய போக்குகளை நியாயப்படுத்துகிறது. மேலும், ஒப்பந்தத்திலுள்ள இந்த அம்சத்தை யாருமே சரிவரக் குறிப்பிடாதது இந்தக் கொடுமைக்குத் துணை போவதாயும் உள்ளது.

3. இலங்கைத் தமிழர்கள், முற்றிலும் சிங்களமயமாக்கப்பட்டு விட்ட இலங்கை இராணுவத்தின் தாக்குதலுக்கு உட்பட்டு அகதிகளாகப் பெருமளவில் வரத் துவங்கிய பின்புதான் இந்திய அரசு "கவலைப்பட"த் தற்குப் ஆரம்பித்தது. மேலும், தமிழ்நாட்டு அரசியலிலும் இலங்கைப் பிரச்சினை ஒரு முக்கியப் பிரச்சினையாக உருவெடுத்த பின்பே இந்திய அரசு "செயல்பட"த் துவங்கியது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இலங்கைத் தமிழர்களின் அமைப்புகளால் தமிழீழத்துக்கான அறைகூவல் முன்வைக்கப்பட்டதும் தமிழர்களினது சுயநிர்ணய உரிமைக்கான போராட்டம் வலுப்பெற்றதும் இந்திய அயலுறவுக் கொள்கையில் ஏற்படவிருந்த மாற்றங்களைக் குறிப்பால் உணர்த்தின.

4. இந்திய அரசானது தான் இலங்கைப் பிரச்சினையில் ''நடுநிலை'' வகிப்பதாகக் கூறிக்கொண்டே இலங்கை அரசுடன் ஒத்துழைக்க முற்பட்டது. ராஜீவ் காந்தி பிரதமர் பதவியேற்றவுடன் நடத்தப்பட்ட திம்பு பேச்சுவார்த்தையின் போது இது வெளிப்பட்டது. அனைத்துத் தமிழர் பிரதிநிதிக் குழுக்களும் இல்லாமலேயே திம்புவில் இரண்டாவது கட்டப் பேச்சுவார்த்தையை நடத்த இந்திய அரசு முயன்றது; இதற்காக விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் பாலசிங்கம், புரொடைக் (Proteg) அமைப்பாளர் சந்திரகாசன், தமிழீழ விடுதலை இயக்க (Telo) ஆலோசகர் சத்தியேந்திரா ஆகியோரை நாடு கடத்த முனைந்தது. அது மட்டுமல்ல; மிக அண்மைக் காலம் வரை இலங்கை அரசுடன் அதற்கு இணக்கமான முறையில் பேச்சுவார்த்தை நடத்துவதற்குத் தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணித் தலைவர்களையே பயன்படுத்தியது. கடந்த இரு ஆண்டுகளாகத் தமிழர்களின் முக்கிய போராட்ட சக்தியாகப் பலம் பெற்று வந்த தமிழீழ விடுதலைப் புலிகளை ஒரு முக்கிய சக்தியாக அண்மையில்தான் கருத்தில் கொண்டது.

கடந்த ஜூன் மாதம் இந்திய அரசு தனது விமானப் படை மூலம் யாழ்ப்பாணத்தின் மீது உணவுப் பொட்டலங்களைப் போட்டபோது வெளிப்படுத்தியது என்னவென்றால், தொடர்ந்து இலங்கை அரசு இராணுவத் தீர்வை மேற்கொள்ளலாகாது என்பதைத்தான். அதே சமயம் விடுதலைப் புலிகளுக்கும் பிற அமைப்புகளுக்கும் விமான வீழ்த்தி ஏவுகணைகள் கொடுப்பதைத் தவிர்த்தும் வந்தது. கொடுத்தால் விடுதலைப்



புலிகள் இராணுவரீதியாகப் பலம் பெற்று விட முடியுமே!

5. ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டவுடன் 'நடுநிலை'ப் பாத்திரத்தை இந்திய அரசு முழுமையாகக் கைவிட்டு விட்டது; மேலும், இலங்கை இராணுவத்தை இப்போதோ எதிர்காலத்திலோ, எதிர்கொள்ளக்கூடிய ஒரே பலம் வாய்ந்த இராணுவச் சக்தியான விடுதலைப் புலிகளை அழித்தொழிக்க முற்பட்டு விட்டது.

ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களின் பிரதிநிதிகளாகிய போராளிகளின் ஆயுதங்களைத் தாக்கிப் பறிப்பதில் முனைப்புக்காட்டும் இந்திய அரசு, ஒடுக்கும் அமைப்பாக வளர்ந்தோங்கிவிட்ட இலங்கை அரசை இவ்விதத்தில் மடக்குவதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

☐ ☐ ☐

சரி; விடுதலைப் புலிகளை அழித்தொழிக்க இந்திய—இலங்கை அரசுகள் செய்துகொண்ட ஒப்பந்தத்திலாவது இடமுண்டா என்பதைக் காண்போம். ஒப்பந்தத்தின்படி இந்திய அரசு, ''இலங்கை அரசு கோரும்போதெல்லாம் இராணுவ உதவி வழங்க வேண்டும்'' (military assistance as and when required). ஆனால் ஒப்பந்தத்தின்படியும் அல்லாமல் இந்திய இராணுவமானது முழுமையானதொரு இராணுவமாகவே செயல்பட்டு வருகிறது. விடுதலைப் புலிகளை அழித்தொழிப்பது என்ற குறிக்கோளை நிறைவேற்றுவதற்காக எந்தெந்த இடத்தில், எந்தெந்த வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்வது என்ற திட்டங்களையும் தானே வகுத்துக் கொள்கிறது!

இச்செயல்களுக்கு எல்லாம் ஒப்பந்தம் மட்டுமே காரணமாகிவிட்டது! தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி முன்வைத்துள்ள குறைந்தபட்சக் கோரிக்கையான ''வடக்கு கிழக்கு மாகாணங்களின் நிரந்தர இணைப்பு'' என்பதைக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கூட ஒப்பந்தம் ஏற்கவில்லை. ஓராண்டுக்குள் இவ்வித இணைப்பு பற்றிய இறுதி முடிவு கிழக்கு மாகாணத்தில் பொதுஜன வாக்கெடுப்பு மூலம் தீர்மானிக்கப்படும் என்று ஒப்பந்தம் வரையறுக்கின்றது. ஆனால் கிழக்கு மாகாணத்தில் சிங்களவர்களும் முஸ்லீம்களுமே சேர்ந்து பெரும்பான்மையினராக உள்ளனர். இவர்கள் இணைப்புக்கு எதிராகவே வாக்களிப்பார்கள் என்பது தெளிவு. மேலும், சிங்களவர் மற்றும் முஸ்லீம்களது கூட்டுப் பெரும்பான்மையானது, இலங்கையரசின் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களால் கிழக்கு மாகாணத்தில் உருவாக்கப்பட்டதாகும்.

நிரந்தர இணைப்பு பற்றி கிழக்கு மாகாணத்தில் நடக்கவிருக்கும் வாக்கெடுப்பை ஒத்திவைக்க இலங்கை ஜனாதிபதிக்கு அதிகாரம் உண்டு என்று ஒப்பந்தம் கூறுகிறது. ஆனால் ஜெயவர்த்தன வாக்கெடுப்பை காலவரையின்றி ஒத்திவைப்பார் என்று நம்புவது முட்டாள்தனமானது.

மேலும், நடந்து வரும் இராணுவத் தாக்குதல்களை வைத்துப் பார்க்கும்போது, இந்திய அரசு ஒப்பந்தத்தை அரசியல் ரீதியாக நடைமுறைப்படுத்தும் என்ற நம்பிக்கை நமக்கு இல்லை. மாறாக, இந்திய அரசும் இலங்கை அரசும் விடுக்கும் அறிக்கையிலிருந்து தெரிய வருவது என்ன? விடுதலைப் புலிகளை அழித்தொழித்த பிறகு இந்திய இராணுவம் இலங்கையில் நிலைகொள்வதை இந்திய அரசே அவ்வளவாக விரும்பவில்லை. மற்றும் இலங்கை அரசும் இந்திய இராணுவம் இலங்கையை விட்டு வெளியேறுவதை வலியுறுத்தும்.

எனவே இந்திய அரசின் உண்மையான குறிக்கோள் என்ன? இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைகளைத் "தீர்க்க" போடப்பட்ட இந்த நைந்துபோன ஒப்பந்தம் அதன் நோக்கமல்ல! மாறாக, இருநாட்டு அரசுத் தலைவர்களுக்கும் இடையே பரிமாற்றம் செய்யப்பட்ட கடிதங்களே இங்கு முக்கியத்துவம் பெறுகின்றன.



இக்கடிதங்களில் குறிப்பிடப்பட்டுள்ளவை இதே ஒப்பந்தத்திலோ, இன்னொரு ஒப்பந்தத்திலோ அதிகாரப்பூர்வமான அங்கீகாரம் பெறும் என்றும் தெரிகிறது.

இந்தக் கடிதங்களின்படி, இலங்கையரசு இந்திய அரசு "தனக்கு எதிரானது" என்று கருதக்கூடிய எவ்வித உடன்படிக்கையையும் ஒப்பந்தத்தையும் இன்னொரு நாட்டுடன் செய்துகொள்ளக் கூடாது; இந்திய நலன்களைப் பாதிக்கும் வகையில் திருகோணமலைத் துறைமுகத்தைக் குத்தகைக்கு விடுதல், வாய்ஸ் ஆப் அமெரிக்கா வானொலி நிலையத்தை அமைத்தல் போன்றவற்றை இலங்கை அரசு செய்யக்கூடாது.

இது ஒருவிதமான மன்றோ கொள்கையாகும்.[1] இதன்படி இலங்கையின் இறையாண்மையானது இந்திய அரசின் மேலாதிக்கத்துக்கு உள்ளாக்கப்படுகிறது. தனது இறையாண்மையை ஓர் அண்டை நாட்டுக்கு விட்டுக் கொடுக்க இந்தியாவோ, பாகிஸ்தானோ ஒருபோதும் சம்மதியாது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

ஜெயவர்த்தன தமது நீண்ட நாளைய நண்பனான அமெரிக்க அரசின் வற்புறுத்தலின் பேரிலேயே இதைச் செய்தார் என்பது தெளிவு. அதாவது அமெரிக்க, அரசு திருகோணமலைத் துறைமுகத்தின் மீதான தனது ஆர்வத்தைக் குறைத்துக் கொண்டு விட்டது எனலாம்.

மேலும், இந்த மன்றோ கொள்கையானது, இந்திய அரசு தன்னை ஒரு பிராந்திய வல்லரசாக மாற்றிக்கொண்டு தன் மேலாத்கத்தை இப்பிராந்தியத்தில் நிலைநாட்ட வகை செய்கிறது. இது ஏதோ எனது தனிப்பட்ட கருத்து என்று கருதிவிடக் கூடாது; மாறாக ஒரு வரலாற்று உண்மை என்றே இதை இனங்காணப்பட வேண்டும்.

தென்னாசியப் பிராந்தியத்தின் அண்மைக்கால வரலாற்றிலுள்ள பல நிகழ்வுகளை அர்த்தப்படுத்திப் பார்த்தால் இது தெளிவாகும். அவற்றில் சில "நியாயமாகவும்" சில "அநியாயமாகவும்" தற்போது தோன்றலாம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

1. இந்தியப் பரப்பிலுள்ள காஷ்மீர் பிரதேசத்தை இந்திய அரசியலுக்குள் கொண்டு வந்தது;
2. போர்த்துக்கீசரிடமிருந்து கோவாவை விடுவித்தது;
3. வடகிழக்கிலுள்ள மிசோ, நாகர் தேசிய இனங்களுடன் தொடர்ந்து இராணுவ மோதல்கள் ஏற்படுத்திவருவது;
4. பாகிஸ்தானைத் துண்டாடி, 1971இல் வங்காள தேசத்தை ஏற்படுத்தியது;
5. இராஜஸ்தான் பாலைவனத்தில் 1971இல் அணுகுண்டு சோதனைகளை நிகழ்த்தியது;
6. 1973க்கும் 1978க்கும் இடையே இந்திய அரசுக்கும் இரான் நாட்டு ஷா மன்னரின் அரசுக்கும் உறவுகள் ஏற்பட்டது;
7. முஜிபுர் ரகுமானுக்குப் பின்பு வங்காள தேசத்தில் 1975ல் நடந்த இராணுவப் புரட்சிகளில் இந்திய அரசும் அமெரிக்கச் சி. ஐ.ஏ. உளவு நிறுவனமும் பங்கு வகித்தது;
8. 1976ல் சிக்கிம் இந்திய பரப்பில் இணைக்கப்பட்டது;
9. நேப்பாளத்தை, ''தேவை'' யென்றால் இந்தியப் பரப்பில் இணைப்பதற்குத் திட்டங்களை வைத்திருப்பது;
10. இலங்கைத் தமிழ்ப் போராளிகளுக்கு அரசியல் தஞ்சமளித்து, அதே சமயத்தில் இலங்கை அரசுடனும் நட்புறவு பாவித்தது; பின்னர் இலங்கை அரசுடன் ஒப்பந்தம் செய்து விடுதலைப் புலிகளை ஒழிக்க முற்படுவது.

1971-ஆம் ஆண்டுதான், இந்திய அரசு தன்னை நிலை நிறுத்திக் கொள்வதற்கான முதற்கட்டமாக அமைந்தது. இரண்டு பெரும் போர்களுக்குப் பின்பு இந்திய அரசு பாகிஸ்தானைப் பணிய வைத்து, இப்பிராந்தியத்தில் தனது மேலாதிக்கத்தை நிறுவியது.



தற்போது ஏற்பட்டுள்ள இந்திய-இலங்கை அரசுகளின் ஒப்பந்தம் இந்திய அரசு செலுத்தி வரும் மேலாதிக்கத்தின் இரண்டாவது கட்டமாகும். அதாவது வரலாற்றிலேயே முதன்முறையாக அண்டைநாடு ஒன்றில் அந்நாட்டு அரசின் அனுமதியுடன் நுழைந்து அதன் உள்நாட்டு எதிரிகளை இந்திய அரசு அழிக்க முற்பட்டுள்ளது.[2]

ஜெயவர்த்தனவுக்கு விடுதலைப் புலிகளை ஒழிப்பதற்கு உதவியளித்து, அதற்குச் சன்மானமாக அயலுறவுக்கொள்கையில் இலங்கை அரசிடமிருந்து ஆதாயங்களைப் பெற்றுக் கொண்டு விட்டது இந்திய அரசு; இவ்விரண்டு அரசுகளுக்கிடையிலான உறவுகள் மாறுவதற்கு அடிப்படையான பேரத்தின் சாரம் இதுதான்!

☐ ☐ ☐

இலங்கை அரசில் பதவி வகிக்கும் பலர் இந்திய அரசின் ''மன்றோ கொள்கையை'' எதிர்த்துக் குரலெழுப்பியுள்ளனர். இவர்களில் காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சரான காமினி திசநாயகவும் அடங்குவார். (இவர் ஒப்பந்தத்தை வரவேற்றவராவார்). வல்லரசுகளுமே தமது ''மன்றோ கொள்கைகளை'' நடைமுறைப்படுத்துவதில் சிக்கல்களை எதிர்கொள்கின்றன என்பதையே இது குறிக்கிறது.

ஆனால் இங்கு நாம் புரிந்துகொள்ளவேண்டியது என்ன? வல்லரசுகள் தமக்கான ''மன்றோ கொள்கைகளை'' வகுத்துச் செயல்படுவதில் தீவிரமாக உள்ளன என்பதும், தமது நலன்களை விரிவாக்கிக் கொள்வதற்காக, ''பிராந்திய அமைதி மற்றும் பாதுகாப்பு'' என்ற பெயரில் பிறர் நலன்களைப் புறக்கணிக்கவும் காவு கொடுக்கவும் தயாராயுள்ளன என்பதும்தான். இவ்வகை ''மன்றோ கொள்கைகளில்'' தான் முன்னாள் சோவியத் தலைவரான பிரஷ்னேவின் ''வரையறுக்கப்பட்ட இறையாண்மை''[3] (limited sovereignty) என்ற கொள்கையும் அடங்கும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

1. இந்தியப் பரப்பிலுள்ள காஷ்மீர் பிரதேசத்தை இந்திய அரசியலுக்குள் கொண்டு வந்தது;
2. போர்த்துக்கீசரிடமிருந்து கோவாவை விடுவித்தது;
3. வடகிழக்கிலுள்ள மிசோ, நாகர் தேசிய இனங்களுடன் தொடர்ந்து இராணுவ மோதல்கள் ஏற்படுத்திவருவது;
4. பாகிஸ்தானைத் துண்டாடி, 1971இல் வங்காள தேசத்தை ஏற்படுத்தியது;
5. இராஜஸ்தான் பாலைவனத்தில் 1971இல் அணுகுண்டு சோதனைகளை நிகழ்த்தியது;
6. 1973க்கும், 1978க்கும் இடையே இந்திய அரசுக்கும் இரான் நாட்டு ஷா மன்னரின் அரசுக்கும் உறவுகள் ஏற்பட்டது;
7. முஜிபுர் ரகுமானுக்குப் பின்பு வங்காள தேசத்தில் 1975ல் நடந்த இராணுவப் புரட்சிகளில் இந்திய அரசும் அமெரிக்க சி. ஐ.ஏ. உளவு நிறுவனமும் பங்கு வகித்தது;
8. 1976ல் சிக்கிம் இந்திய பரப்பில் இணைக்கப்பட்டது;
9. நேப்பாளத்தை, ''தேவை'' யென்றால் இந்தியப் பரப்பில் இணைப்பதற்குத் திட்டங்களை வைத்திருப்பது;
10. இலங்கைத் தமிழ்ப் போராளிகளுக்கு அரசியல் தஞ்சமளித்து, அதே சமயத்தில் இலங்கை அரசுடனும் நட்புறவு பாவித்தது;பின்னர் இலங்கை அரசுடன் ஒப்பந்தம் செய்து விடுதலைப் புலிகளை ஒழிக்க முற்படுவது.

1971-ஆம் ஆண்டுதான், இந்திய அரசு தன்னை நிலை நிறுத்திக் கொள்வதற்கான முதற்கட்டமாக அமைந்தது. இரண்டு பெரும் போர்களுக்குப் பின்பு இந்திய அரசு பாகிஸ்தானைப் பணிய வைத்து, இப்பிராந்தியத்தில் தனது மேலாதிக்கத்தை நிறுவியது.



தற்போது ஏற்பட்டுள்ள இந்திய-இலங்கை அரசுகளின் ஒப்பந்தம் இந்திய அரசு செலுத்தி வரும் மேலாதிக்கத்தின் இரண்டாவது கட்டமாகும். அதாவது வரலாற்றிலேயே முதன்முறையாக அண்டைநாடு ஒன்றில் அந்நாட்டு அரசின் அனுமதியுடன் நுழைந்து அதன் உள்நாட்டு எதிரிகளை இந்திய அரசு அழிக்க முற்பட்டுள்ளது.[2]

ஜெயவர்த்தனவுக்கு விடுதலைப் புலிகளை ஒழிப்பதற்கு உதவியளித்து, அதற்குச் சன்மானமாக அயலுறவுக்கொள்கையில் இலங்கை அரசிடமிருந்து ஆதாயங்களைப் பெற்றுக் கொண்டு விட்டது இந்திய அரசு; இவ்விரண்டு அரசுகளுக்கிடையிலான உறவுகள் மாறுவதற்கு அடிப்படையான பேரத்தின் சாரம் இதுதான்!

☐ ☐ ☐

இலங்கை அரசில் பதவி வகிக்கும் பலர் இந்திய அரசின் ''மன்றோ கொள்கையை'' எதிர்த்துக் குரலெழுப்பியுள்ளனர். இவர்களில் காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சரான காமினி திசநாயகவும் அடங்குவார். (இவர் ஒப்பந்தத்தை வரவேற்றவராவார்). வல்லரசுகளுமே தமது ''மன்றோ கொள்கைகளை'' நடைமுறைப்படுத்துவதில் சிக்கல்களை எதிர்கொள்கின்றன என்பதையே இது குறிக்கிறது.

ஆனால் இங்கு நாம் புரிந்துகொள்ளவேண்டியது என்ன? வல்லரசுகள் தமக்கான ''மன்றோ கொள்கைகளை'' வகுத்துச் செயல்படுவதில் தீவிரமாக உள்ளன என்பதும், தமது நலன்களை விரிவாக்கிக் கொள்வதற்காக, ''பிராந்திய அமைதி மற்றும் பாதுகாப்பு'' என்ற பெயரில் பிறர் நலன்களைப் புறக்கணிக்கவும் காவு கொடுக்கவும் தயாராயுள்ளன என்பதும்தான். இவ்வகை ''மன்றோ கொள்கைகளில்'' தான் முன்னாள் சோவியத் தலைவரான பிரஷ்னேவின் ''வரையறுக்கப்பட்ட இறையாண்மை''[3] (limited sovereignty) என்ற கொள்கையும் அடங்கும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விடுதலைப்புலிகளை அழித்தொழிப்பதை நியாயப் படுத்துவதற்கு இந்திய அரசுக்குப் பல காரணங்கள் உடனடியாகத் தேவைப்பட்டன. அடிப்படையிலேயே விடுதலைப் புலிகள் அமைப்பு இலங்கைத் தமிழர்களின் "உண்மையான" நலன்களுக்குப் புறம்பானது என்ற குற்றச்சாட்டு இந்திய அரசால் முன் வைக்கப்பட்டுள்ளது. இது உண்மை என்றே வைத்துக் கொண்டாலுங்கூட, **இலங்கைத் தமிழர்களின் உண்மையான நலன்கள் யாவை என்று தீர்மானிக்கும் உரிமை இலங்கைத் தமிழர்களுக்குத்தான் உண்டு**; தம்மைப் பிரதிநிதித்துவப் படுத்துவது யார் என்று தீர்மானிக்கும் உரிமையை வேறு யாருக்கோ அவர்கள் தாரைவார்த்துக் கொடுக்க வேண்டும் என்று கூறுவது அரசியல் நேர்மையாகாது.

மேலும், விடுதலைப்புலிகள்மீது இந்திய அரசு கொண்டுள்ள பகைமையுணர்வு இலங்கைத் தமிழர்களின் நலன்களை அது கருத்தில் கொண்டதால் ஏற்பட்டதல்ல. மாறாக இந்திய அரசின் சுயநலன்களையே அடிப்படையாகக் கொண்டதாகும். இவ்வாறு இந்திய அரசு தன் நலன்களைப் பேணுவதற்காக, "சைத்தானான" இலங்கை அரசுடனேயே கைகோத்துக் கொண்டுவிடும் என்பதும் தெளிவாக்கப்பட்டு விட்டது.

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு அரசியல் தெளிவற்ற, ஆயுதந்தாங்கிய ஓர் அமைப்பாகவே இருக்கலாம்; சிங்கள மக்கள்மீதும் பிற தமிழ்ப் போராளி அமைப்புக்கள் மீதும் அடக்குமுறையைக் கட்டவிழ்த்த குற்றங்களைச் செய்தே இருக்கலாம். இந்தக் காரணங்களைக் காட்டித் தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான தனது இராணுவத் தாக்குதலை நியாயப்படுத்த முனையும் இந்திய அரசு, இதைவிட மிகக் கொடிய அரசியல், இராணுவக் குற்றங்களைத் தமிழர்களுக்கு எதிராகக் கடந்த முப்பதாண்டுகளுக்கும் மேலாகச் செய்து வந்துள்ள இலங்கை அரசைப்பற்றி என்ன தான் கூறுகிறது?



1986-ஆம் ஆண்டின் முற்பகுதியில் இலங்கை அரசு பெரும் இராணுவத் தாக்குதலை மேற்கொண்ட சமயத்தில் தான் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு பலம் வாய்ந்த ஓர் அமைப்பாக மலரத் தொடங்கியது; அதுவரை தமிழர்களின் நலன்களைத் தான் பிரதிபலிப்பதாகக் கூறி வந்த தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியைவிட முக்கியமான அரசியல் சக்தியாக விடுதலைப்புலிகள் அமைப்பு தன்னை இனங்காட்டிக் கொண்டது. இலங்கை அரசின் கொடூரத் தாக்குதல்களுக்கு முகம் கொடுத்து, தமிழ் மக்களின் உயிர்களையும் உடைமைகளையும் பாதுகாத்து வந்துள்ள வீரமிக்க அமைப்பாக திகழ்ந்தது. விடுதலைப்புலிகள் பிற போராளி அமைப்புக்களை ஒடுக்கியது தமிழர்களின் ஆயுதமேந்திய போராட்டத்தை ஓரளவு பின்தள்ளி விட்டிருந்தாலுங்கூட, இதை நாம் மறந்து விடலாகாது.

வரலாற்று ரீதியாக நடந்துவரும் ஒடுக்குமுறைகளையும், அவற்றுக்கு எதிராகக் கிளர்ந்தெழும் போராட்ட சக்திகள் செய்யும் ஒடுக்குமுறைகளையும் ஒரே அளவைகளில் நிறுப்பது தவறாகும்; அது அரசியல் நியாயமுமாகாது. வரலாற்றில் முதல்முறையாக இவற்றை விடுதலைப்புலிகள்ச் செய்தவர்களுமில்லை. அமெரிக்க அரசு கம்பூச்சிய மக்களைக் கொன்று குவித்ததை எதிர்த்துப் போராடிய கேமர் ரூஜ் (Khmer Rouge) என்ற கம்பூச்சிய கம்யூனிஸ்ட் கட்சி அமைப்பை இங்கு ஒரு முக்கிய எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம். அமெரிக்க அரசு விமானம் மூலமாகவும் தரை மூலமாகவும் கம்பூச்சியாவில் பயங்கரத் தாக்குதலை நடத்திக் கொண்டிருந்தபோது, வேறொரு அந்நிய சக்தி கேமர் ரூஜ் அமைப்பை அழிக்க வேண்டும் என்று யாராவது கோரியிருக்க முடியுமா என்ன?

ஒடுக்கப்பட்ட மக்களின் பிரதிநிதிகளை ஒரேயடியாக அழித்துவிட்டு, ஒடுக்கும் அமைப்பான அரசை அப்படியே விட்டுவிடுவது எந்த அரசியல் நியாயத்தில் சேரும்? இலங்கையில் நடந்து வருவது இதுவேயாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விடுதலைப்புலிகள் ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ள வில்லை; ஏற்றுக்கொள்ளலாமா என்று பரிசீலிக்கவே செய் தனர். பின்னர் ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்படும்போது பலமுறை தமது எதிர்ப்புகளைத் தெரிவித்தனர். இதை யடுத்து விடுதலைப்புலிகளுக்கு "ஒரு பாடம் கற்பிக்க" இந்திய அரசு முடிவெடுத்தது. விடுதலைப்புலிகள் ஒப்பந் தத்தை ஏற்று இந்திய அரசுடன் ஒத்துழைக்க மறுத்ததற்கு குறைந்தபட்சக் காரணங்களாக நான்கைச் சொல்லலாம்.

1. திணிக்கப்பட்ட ஓர் ஒப்பந்தத்தில் இருந்த பல்வேறு குறைபாடுகள்:
2. இலங்கை-இந்திய அரசுகளின் உள்நோக்கங்கள் பற்றிய சந்தேகங்களும், இவ்வரசுகள் மீதான நம்பிக்கை யின்மையும்;
3. ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்பட்டால் ஏற்படவிருந்த இடைக்கால நிர்வாக அமைப்பில் (Interim Administrative Council) தாமே பெரும்பங்கு வகிப்பது;
4. ஆயுதங்களை ஒப்படைத்துவிட்டு இந்திய, இலங்கை இராணுவங்களுக்கு இடையில் அரசியல் நடவடிக்கைகள் மேற்கொள்வதில் இருந்த சிரமங்கள்.

**இந்திய இலங்கை அரசுகள்மீது விடுதலை புலிகள் ஏன் நம்பிக்கை வைக்க வேண்டும்? தமிழர்களுக்கு இவ்வரசுகள் கொடுத்த கடந்தகால வாக்குறுதிகளும் செயல்களும் இது நாள் வரை காப்பாற்றப்பட்டுள்ளனவா என்ன?**

□ □ □

எது எப்படியிருந்தாலும் விடுதலைப்புலிகள் ஒப்பந் தத்தை ஏற்கவில்லை என்பதற்காக அவர்கள் மீது இராணுவ நடவடிக்கை எடுத்ததை இந்திய அரசு நியாயப்படுத்தவே முடியாது.

விடுதலைப்புலிகள் மீது இந்திய அரசு வைத்த பிற குற்றச்சாட்டுகளின் சாரமும், அவை வைக்கப்பட்ட நேரமும்



இந்திய அரசின் காழ்ப்புணர்ச்சியையும் ஒருதலைப்பட்ச மான போக்கையுமே வெளிச்சம்போட்டுக் காட்டின. இக் குற்றச்சாட்டுகள் இலங்கையிலுள்ள ஜெயவர்த்தன அரசுக் கும் அதற்கு முற்பட்ட அரசுகளுக்கும் "பாவமன்னிப்பு" வழங்கவே பயன்படுகின்றன; இலங்கை அரசின் தமிழர் விரோத அரசியல் கொள்கைகளையும், கலாச்சார, பொருளாதார அடக்குமுறைகளையும் நியாயப்படுத்தவே உதவுகின்றன. இவற்றிலிருந்து இந்திய அரசு இலங்கைத் தமிழர்களுக்காக வடித்தது முதலைக் கண்ணீரே என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

விடுதலைப்புலிகள் அமைப்பு மிகக் கொடூரமானது என்று இந்திய அரசு கணித்திருந்தால், இடைக்கால நிர்வாக அமைப்பில் அவர்களுக்கு முக்கியப் பங்களித்தது ஏன்? இப் போதுங்கூட அவர்களுக்கு "அரசியல் பாதை"யில் இட முண்டு என்று திரும்பத் திரும்பக் கூறிவருவது ஏன்? இப் பிரச்சினையில் உண்மைக் குற்றவாளியான இந்திய அரசும் அதன் ஆதரவாளர்களும் தம்மை நியாயப்படுத்திக்கொள்ள "தேசியத்தையும்," "தேசபக்தி உணர்வையும்" மக்களி டையே கூவியழைக்கின்றனர்! தனது விமரிசகர்களை ஒடுக்கு வதாக நினைத்துக்கொண்டு இந்திய மக்களிடமிருந்து அந்நியப்பட்டு நிற்கின்றது இந்திய அரசு. அரசுகளைப் பொறுத்தவரை இது வழக்கமாக நடைபெறுவதாகும்,

இந்திய அரசின் செயல்களை விமரிசிப்பவர்கள்கூட "தேசத்துரோகிகள்" என்ற பட்டத்தைச் சுமப்பதற்குப் பயப்படுகிறார்கள். எனவேதான் அவர்கள் "இந்திய அரசின் நலன்கள் இப்படிப்பட்ட செயல்களால் பாதுகாக்கப்பட வில்லை" என்பதைச் சுட்டிக்காட்டி வருகின்றனர். "இந்தி யாவின் வியட்நாமாக யாழ்ப்பாணம் (அல்லது இலங்கை) மாறிவிடக்கூடும்" என்ற கணிப்பும் இதிலிருந்தே எழுந்தது தான்.

"இந்தியா இலங்கையில் அரசியல் (அல்லது இராணுவப்) புதைகுழியில் மாட்டிக்கொண்டு விட்டது" என்பதற்காகவே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நாம் இந்திய அரசை எதிர்க்கக்கூடாது. இங்கு இந்தியாவின் அல்லது பிற சக்திகளின் நலன்களுக்கு முதன்மை தருதல் கூடாது; இங்கு இந்தியாவின் நலன்களாக இந்திய அரசு முன்வைப்பவற்றை நாம் ஆதரிக்க வேண்டியதில்லை. மாறாக இந்திய அரசு தார்மீகரீதியாகவே இலங்கைத் தமிழர்களுக்கு அநீதி இழைத்து வருகிறது; இது கண்டிக்கத் தக்கது என்பதாலேயே இந்திய அரசை நாம் எதிர்க்க வேண்டும்.

இந்திய அரசின் செயல்களால் பிரதானமாகப் பாதிக்கப் பட்டவர்கள் (principal victims) இலங்கைத் தமிழர்களும், அவர்களின் பிரதிநிதிகளுமேயாவர்; இந்திய அரசின் அநீதி யால் மிக மோசமான நிலைமைக்கு அவர்கள் தள்ளப்பட் டுள்ளனர்.

எனவே நாம் முதன்மைப்படுத்திப் பாதுகாக்க வேண் டியது இலங்கைத் தமிழர்கள் தங்களுடையதாகக் கருதும் உரிமைகளும் நலன்களுமேயாகும்; ''இந்தியாவின் நலன் கள்'' அல்ல. இதை மீண்டும் நாம் இங்கே வலியுறுத்தக் கடமைப்பட்டுள்ளோம்.

(இல்லஸ்ட்ரேடட் வீக்லி ஆஃப் இந்தியா, டிசம்பர் 6, 1987)

* * *

## அடிக்குறிப்புகள்

1. **மன்றோ கொள்கை :**

1825-1827 ஆம் ஆண்டுகளில் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ஜேம்ஸ் மன்றோ உருவாக்கி வலியுறுத்திய கொள்கை. இதன்படி ஐரோப்பிய அரசுகள் எதுவும் அமெரிக்கக் கண்டத்தில் தலையிடக்கூடாது; அதேபோல் அமெரிக்காவும் ஐரோப்பியக் கண்டத்தில் தலையிடாது.

2. **கட்டுரையாளரின் இக்கூற்றுக்கு ஒரு திருத்தம் :**

1971 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இலங்கையில் சிறிமாவோ பண்டாரநாயகாவின் அரசுக்கு எதிராக ஜனதா விமுக்தி பெரமுன (JVP) இயக்கம் நடத்திய புரட்சியை அடக்கி ஒடுக்குவதில் இந்திய இராணுவமும் துணைநின்றது; பல நாட்டு இராணுவங்கள் சேர்ந்து ஜே. வி. பி. இயக்கத்தைச் சார்ந்த 15,000 இளைஞர் களைக் கொன்று குவித்தன.

எனவே இந்திய அரசு அண்டை நாடு ஒன்றின் அரசின் அனுமதியுடன் அந்நாட்டுக்குச் சென்று அங்குள்ள புரட்சியாளர்களைக் கொல்லத் துணை நிற்பது என்பது முதல் முறையாக நடப்பது அல்ல.

மேலும் பர்மா, இந்தோனேசியா, மலேசியா ஆகிய நாடுகளின் அரசுகளுக்கு எதிரான புரட்சியாளர்களை ஒடுக்குவதற்காக அவற்றுக்கு இராணுவ உதவியும், பயிற்சியும் வழங்கியுள்ளது.

3. **வரையறுக்கப்பட்ட இறையாண்மை :**

செக்கோஸ்லோவேகியா மீது 1968-இல் சோவியத் யூனி யனின் தலைமையில் வார்சா ஒப்பந்த நாடுகளின் துருப்புக்கள் படையெடுத்து, அங்கு சீர்திருத்தங்களைக் கொண்டு வந்த அலெக்சாண்டர் டூப்செக்கின் அரசை மாற்றி அமைத்தன. பின்பு இந்தப் படையெடுப்புக் கான தத்துவார்த்த நியாயத்தை வழங்க சோவியத் கம்யூனிஸ்ட் கட்சிச் செயலாளரான லியோனிட் பிரஷ் னேவ் முன்வைத்த கருத்தே இது. 1969-இல் மாஸ்கோ வில் நடந்த ஐரோப்பிய கம்யூனிஸ்ட் மற்றும் தொழி லாளர் கட்சிகளின் மாநாட்டில் ''ஒரு சோசலிச அரசின் இறையாண்மையின் வர்க்க உள்ளடக்கம் சோசலிச முகாமுக்கும், சர்வதேச புரட்சிகர இயக்கத்துக்கும் அது ஆற்றவேண்டிய சர்வதேசியக் கடமையுடன் பிணைந் துள்ளது'' என்பது வரையறுக்கப்பட்டு, பின்னர் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 24-வது காங்கிரசில் உறுதி செய்யப்பட்டது.

—★—



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிற்சேர்க்கை

# நமது புரட்சியில் பாட்டாளி வர்க்கத்தின் கடமைகள்

(பாட்டாளிவர்க்கக் கட்சிக்கான நகல் கொள்கை)

—வி. இ. லெனின்

**லெனின் கட்டுரை பற்றி**
**மொழி பெயர்ப்பாளர் குறிப்பு :**

பல்வேறு நாட்டுத் தொழிலாளர் அமைப்புகள் ஒன்றிணைந்த சர்வதேசத் தொழிலாளர் சங்கம் 1864 ல் கார்ல் மார்க்ஸ் தலைமையில் ஏற்படுத்தப்பட்டது. சோசலிசக் கருத்துகளை உலகின் பலநாடுகளில் பரப்பும் பாட்ட ாளிவர்க்க இயக்கங்களை ஆதரித்து வலுப்படுத்த வும் இச்சங்கம் பயன்பட்டது. முதலாவது அகிலம் (First International) என்றழைக்கப்படும் இச்சங்கம் 1876-இல் கலைக்கப்பட்டது. இதற்கு முக்கியமான காரணங்களில் ஒன்று அதில் அங்கம் வகித்த அராஜகவாத இயக்கத் தலைவர் பகூனினின் சீர்குலைவு நடவடிக்கைகளாகும்.

பின்னர் 1889-ல் இரண்டாவது அகிலம் உருவாக்கப் பட்டது. விஞ்ஞான சோசலிசத்தை ஏற்றுக் கொண்ட பல தொழிலாளர் கட்சிகளும் இயக்கங்களும் உருவாக எங்கல்சின் வழிகாட்டுதல் காரணமாக இருந்தது. இக் கட்சிகள் பொதுவாக சமூக-ஜனநாயகக்கட்சிகள் (Social Democracy) என்று அப்போது அழைக்கப்பட்டு வந்தன. ஐரோப்பாவில் மிகப்பெரும் சமூக-ஜனநாயகக் கட்சியாக ஜெர்மன்சமூக-ஜனநாயகக் கட்சி திகழ்ந்தது. பல சமூக-ஜனநாயகக் கட்சிகளும் இங்கிலாந்து, பிரான்ஸ், இத்தாலி போன்ற நாடுகளிலிருந்த தொழிலாளர் கட்சிகளும் சோசலிசக் கட்சிகளும் இரண்டாம் அகிலத்தில் அங்கம் வகித்தன. லெனின் பங்கேற்றிருந்த ரஷ்ய சமூக ஜனநாயகத் தொழிலாளர் கட்சியும் அதில் இருந்தது.

பெர்ன்ஸ்டின், கவுட்ஸ்கி போன்ற ஜெர்மானியத் தலைவர்களும் பிளக்கனோவ் போன்ற ரஷ்யத் தலைவர்களும் சமூக-ஜனநாயக இயக்கத்தின் ஜாம்பவான்கள் எனக் கருதப்பட்டவர்கள். இவர்களும் இவர்களது ஆதரவாளர்களும்தான் இரண்டாம் அகிலத்தின் பெரும்பான்மையானவராக இருந்தனர். 1914-இல் அதன் தகர்வுக்கும் இவர்களே காரணம். ஏன்?

மார்க்சியவாதி எனத் தன்னை அழைத்துக் கொள்ளும் ஒருவன் உண்மையிலேயே புரட்சிவாதியாக, உண்மையான சர்வதேசியவாதியாக இருக்கின்றானா இல்லையா என்பது முதலாளியம் ஆழமான நெருக்கடிக்குள்ளாகி, பாட்டாளி வர்க்கத்தின்மீதும் பிற உழைக்கும் மக்கள்மீதும் கடுமையான ஒடுக்குமுறையைக் கட்டவிழ்த்துவிடும் சமயங்களிலும் ஏகாதிபத்திய மற்றும் ஆக்கிரமிப்புப் போர்களின் போதும் தெளிவாகப் புலப்படும் என்பது லெனின் எடுத்துக் காட்டிய வரலாறு.

முதலாளியம் ஏகபோக முதலாளியமாக வளர்ச்சி பெற்று அது ஏகாதிபத்தியமாக மாறி உலகச் சந்தையை மறுபங்கீடு செய்து கொள்வதற்காக ஏகபோக முதலாளிய நாடுகளிடையே ஏகாதிபத்திய போர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உருவாகும் என்பதை லெனின் ''ஏகாதிபத்தியம்: முதலாளியத்தின் உச்சக்கட்டம்'' என்ற நூலில் விளக்கினார்.

1914 ஆம் ஆண்டு ஜூன் 14இல் ஆஸ்திரிய-ஹங்கேரி முடியாட்சியின் வாரிசான ஆர்ச்ட்யூக் பிரான்ஸ் பெர்டினாண்ட் சுட்டுக்கொல்லப்பட்டதை ஒரு சாக்காக வைத்து முதல் உலகப்போர் மூண்டது. ஜெர்மனி, ஆஸ்திரியா-ஹங்கேரி, துருக்கி ஆகிய மூன்றும் ஒரு அணியிலும் பிரிட்டன், ஜார் ரஷ்யா, பிரான்ஸ் ஆகியன மற்றொரு அணியிலுமாகப் போரில் மோதின.

இந்த ஏகாதிபத்திய நாடுகள் உலகச் சந்தையை மறுபங்கீடு செய்து கொள்வதற்காக நடத்தும் யுத்தத்தை எதிர்க்க வேண்டியதும் தத்தம் சொந்த நாட்டு முதலாளி வர்க்கங்களை எதிர்த்துப் போராடுவதும் ஏகாதிபத்தியப் போரை உள்நாட்டுப்போராக மாற்றி பாட்டாளி வர்க்கப் புரட்சியை, சோசலிசப் புரட்சியை நடத்துவதும்தான் பாட்டாளி வர்க்கத்தின் கடமை என்று லெனினும் அவரது தோழர்களும் கூறினர்.

ஆனால் பிளக்கனோவ், த்ஸெரெத்தெலி, ஷெய்ட்மான், ராம்சே மெக்டொனால்ட் போன்ற இரண்டாம் அகிலத் தலைவர்கள் தத்தம் ''தாய்நாட்டைப் பாதுகாத்தல்'' என்ற பெயரில் ஏகாதிபத்தியப் போரை ஆதரித்தனர். கவுட்ஸ்கி போன்றவர்கள் 'நடுநிலை' (centre) வகித்தனர்; ''சமாதான''த்தைக்கொண்டுவர முயற்சி செய்வதாகக் கூறினர். இந்த இரண்டு வகையினரையும் முறையே சமூக-தேசிய வெறியர்கள், சமூக அமைதிவாதிகள் என்று லெனின் அழைத்தார்.

ஜெர்மன் சமூக-ஜனநாயகக் கட்சியில் மிகப் பெரும்பான்மையினர் கவுட்ஸ்கியின் தலைமையில்தான் இருந்தனர். இவர்களை எதிர்த்து வெளியேறியவர்கள் மிகச்



சிறுபான்மையினர்தான். ரோசா லக்சம்பர்க், கார்ல் லீப்னெக்ட், பிரான்ஸ் மெஹ்ரிங், ஓட்டோ ரூல் போன்ற இத்தகைய உண்மையான சர்வதேசவாதிகள் முதலில் 'ஸ்பார்டகஸ் குழு' (அல்லது 'இன்டர் னேஷனல்' குழு) என்ற அமைப்பையும் பின்னர் ஜெர்மானியக் கம்யூனிஸ்ட் கட்சியையும் உருவாக்கினர்.

இவர்களைப் போன்ற உண்மையான சர்வதேசியவாதிகள் இரண்டாம் அகிலத்தில் சிறுபான்மையினராக வேனும் இருக்கவே செய்தனர். இவர்கள் 'ஜிம்மர்வால்ட் இடதுசாரிகள்' என அழைக்கப்பட்டனர். இவர்களில் பெரும்பாலோர் லெனினின் தலைமையில் உருவாக்கப்பட்ட மூன்றாவது அகிலத்தில் (communist international - 1914-1943) சேர்ந்தனர்.

முதல் உலகப் போரின்போது 'இரண்டாம் அகிலத்'தில் ஏற்பட்டிருந்த நெருக்கடி பற்றி லெனின் எழுதிய ஒரு கட்டுரையிலிருந்து சில பகுதிகள் இங்கே தரப்படுகின்றன. திருத்தல்வாதத்திற்கும் சமூக-தேசிய வெறிக்கும் சமூக-அமைதி வாதத்திற்கும் அடிப்படையாக இருந்த பொருளியல் காரணிகளை லெனின் விளக்குவதோடு, உண்மையான சர்வதேசியவாதிகள் ஒரு நாட்டில் மிகச் சிறுபான்மையினராக இருந்தாலும் கூட உண்மையாகவே பாட்டாளி வர்க்க நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்துபவர்கள் அவர்கள்தானேயன்றி பெரிய கட்சிகளை வைத்திருக்கும் போலி சமூக-ஜனநாயகவாதிகள் (போலிக் கம்யூனிஸ்டுகள்) அல்லர் என்பதையும் சுட்டிக்காட்டுகிறார்.

அவரது கட்டுரையைக் கொண்டு இந்தியப் பொதுவுடமை இயக்கங்களிலுள்ள பல்வேறு போக்குகளை வாசகர்களே இனங்கண்டுகொள்ளலாம்.

□ □ □



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நமது புரட்சியில் பாட்டாளி வர்க்கத்தின் கடமைகள்

## (பாட்டாளிவர்க்கக் கட்சிக்கான நகல் கொள்கை)

—வி. இ. லெனின்

..............................

16. ருஷ்ய நாட்டின் தொழிலாளி வர்க்கத்தின் சர்வதேசக் கடமைப் பொறுப்புகள் சரியாக இப்பொழுதுதான் குறிப்பிட்ட வலிவுடன் முதலிடத்துக்கு வந்து கொண்டிருக்கின்றன.

இந்நாட்களில் சோம்பேறிகள் மட்டுமே சர்வதேசியத்தின் பெயரால் சத்தியம் செய்வதில்லை. தாய்நாட்டைப் பாதுகாத்தல் எனக்கூறும் தேசிய வெறியர்கள் கூட (chauvinist defencists), பிளக்கானோவும் பத்ரேசவும் கூட, ஏன் கெரன்ஸ்கியும் கூடத் தங்களை சர்வதேசியவாதிகள் என்று அழைத்துக் கொள்கிறார்கள். எனவே வாய்ச்சொல்லளவு சர்வதேசியத்திற்கு எதிராக, செயல்வடிவ சர்வதேசியத்தைத் தெளிவாகவும் துல்லியமாகவும் திட்டவட்டமாகவும் முன்வைத்து வலியுறுத்துவது மிகவும் அவசரமான கடமையாகிவிட்டது.

..............................

ஏகாதிபத்திய உலகப்போரின் கொடுமையான காட்டுமிராண்டித்தனமான பின்னணியை நல்லவர்கள் பெரும்



பாலும் மறந்துவிடுகிறார்கள். இந்தப் பின்னணி அலங்காரச் சொற்களை சகித்துக் கொள்வதில்லை; வெகுளித்தனமான நல்லெண்ண விருப்பங்களை எள்ளி நகையாடுகிறது.

உண்மையான சர்வதேசியம் என்று ஒன்றே ஒன்றுதான் உள்ளது. அது, தமது சொந்த நாட்டில் புரட்சிகர இயக்கத்தின் வளர்ச்சிக்கும் புரட்சிகரப் போராட்டத்தின் வளர்ச்சிக்கும் (பிரச்சாரம், ஆதரவு, பொருள் வகை உதவி மூலம்) முழுமனதாக உழைப்பதும், இந்தப் போராட்டத்தை, இந்த ஒரே பாதையை எவ்வித விதிவிலக்குமில்லாது ஒவ்வொரு நாட்டிலும் ஆதரிப்பதுமேயாகும். மற்றவையெல்லாம் ஏமாற்றும் மானிலோவிசமும் ஆகும்.

இப்போர் நடந்து கொண்டிருக்கும் கிட்டத்தட்ட இரண்டாண்டுக் காலத்தில் ஒவ்வொரு நாட்டிலும் சர்வதேச சோசலிச இயக்கத்திலும், தொழிலாள வர்க்க இயக்கத்திலும் மூன்று வகைப் போக்குகள் உருவாகியுள்ளன. இந்த எதார்த்த நிலையைக் காண மறுப்பவர்கள், இந்த மூன்று போக்குகள் நிலவுவதை ஒப்புக்கொண்டு அவற்றைப் பகுத்தாய்ந்து உண்மையான சர்வதேசியப் போக்கிற்காகத் தொடர்ந்து தயக்கமின்றிப் போராட மறுப்பவர்கள் யாராயினும் அவர்கள் வீர்யமிழந்து, செயலிழந்து, தவறுகள் புரிவதில்தான் போய் முடிவர்.

**இந்த மூன்று போக்குகளாவன:**

1. சமூக-தேசிய வெறியர் (social-chauvinists); அதாவது சொல்லளவில் சோசலிசவாதிகளாகவும் செயலில் தேசிய வெறியர்களாகவும் இருப்பவர்கள். ஓர் ஏகாதிபத்தியப்போரை (அதுவும் எல்லாவற்றுக்கும் மேலாக இன்றைய ஏகாதிபத்தியப் போரை) ''தாய்நாட்டின் பாதுகாப்பிற்காக'' என்று காண்பவர்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இவர்கள் நமது **வர்க்கவிரோதிகள்**; முதலாளிய வர்க்கத்திடம் போய்ச் சேர்ந்து விட்டவர்கள்; எல்லா நாடுகளிலும் அதிகாரபூர்வமான சமூக-ஜனநாயகக் கட்சிகளின் அதிகாரபூர்வமான தலைவர்களில் பெரும்பான்மையினர் இவர்களே: ருஷ்யாவில் பிளக்கானோவ் வகையறா, ஜெர்மனியில் ஷைட்மான்கள்........................ இத்தியாதி.

2. இரண்டாவது போக்கு, ''நடுநிலை'' (centre) என்று அறியப்படுவது. சமூக-தேசிய வெறியர்களுக்கும் உண்மையான சர்வதேசியவாதிகளுக்குமிடையே ஊசலாடும் நபர்கள் இதில் அடங்குவர்.

இந்த ''நடுநிலை''யாளர்கள் எல்லோரும் தாங்களும் மார்க்சியவாதிகள் என்றும் சர்வதேசியவாதிகள் என்றும் சபதம் செய்து பறைசாற்றுகிறார்கள். மேலும் தாங்கள் சமாதானத்திற்கு நிற்பதாகவும் அரசாங்கங்கள் மீது எல்லா வகையிலும் ''நிர்ப்பந்தம்'' கொண்டுவரவேண்டும் என்றும், ''சமாதானத்திற்கான மக்களின் சித்தத்தை'' ஒவ்வொரு அரசாங்கமும் அறிய முற்படவேண்டும் என்று எல்லாவகையான ''கோரிக்கைகள் முன்வைக்கப்பட'' வேண்டுமென்றும், எல்லாவகையான சமாதான இயக்கங்களையும் பிரதேசக் கைப்பற்றல் இல்லாத சமாதானத்தையும் இன்ன பிறவற்றையும் ஆதரிப்பதாகவும் பறைசாற்றுகிறார்கள். அதே சமயத்தில் **சமூக-தேசிய வெறியர்களுடன் சமாதானம் செய்து கொள்வதை ஆதரிப்பதாகவும்** அறிவிக்கிறார்கள். இந்த ''நடுநிலையாளர்கள்'' ஒற்றுமைக்காக நிற்கிறார்கள்; பிளவை எதிர்க்கிறார்கள்.

''நடுநிலை''யாளர்களின் உலகம் தேன் தடவிய குட்டி முதலாளியின் வாய்ச்சவடால்கள், சொல்லளவில் சர்வதேசீயம், செயலில் கோழைத்தனமான சந்தர்ப்ப



வாதமும், சமூக - தேசியவெறியர்களிடம் கெஞ்சிக் கூத்தாடுவதுமாகும்.

விஷயத்தின் சாரம் என்னவெனில், ''நடுநிலை''யாளர்கள் தங்கள் சொந்த அரசாங்கத்திற்கு எதிராக ஒரு புரட்சி அவசியம் என்பதை மனமார ஏற்றுக்கொள்ளவில்லை; அவர்கள் புரட்சிக்காகப் பிரசாரம் செய்யவில்லை; முழு மனதுடன் புரட்சிகரப் போராட்டத்தைத் தட்டிக் கழிக்க மிகவும் சலிப்பைத்தரும் அதீத-மார்க்சியம் போல் ஒலிக்கும் சாக்குப் போக்குகளைக் கையாளுகிறார்கள்.

சமூக—தேசிய வெறியர்கள் நம் வர்க்க விரோதிகள்; தொழிலாள வர்க்க இயக்கத்திற்குள் இருக்கும் முதலாளிய வர்க்கத்தினர். இவர்கள் தொழிலாளி வர்க்கத்தில் உள்ள ஒரு அடுக்கை, கூட்டத்தை அல்லது சில பிரிவுகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள். இந்த அடுக்கு, கூட்டம் அல்லது பிரிவுகள் மெய்யாகவே முதலாளி வர்க்கத்தால் (நல்ல ஊதியம், கௌரவப் பதவிகள் ஆகியவை மூலம்) லஞ்சம் கொடுத்து வாங்கப்பட்டவர்கள். இந்த அடுக்கைச் சேர்ந்தவர்கள், சிறிய மற்றும் பலகீனமான மக்களைக் கொள்ளையடிக்கவும் ஒடுக்கவும் தங்கள் சொந்த நாட்டு முதலாளி வர்க்கத்திற்குத் துணை போகின்றனர்; முதலாளியக் கொள்ளையைப் பங்கு போடப் போராடும் தங்கள் சொந்த நாட்டு முதலாளிய வர்க்கத்தினருக்கு உதவுகின்றனர்.

இந்த 'நடுநிலை'யாளர்களில், சட்டத்துக்கு உட்பட்டு, இருத்தல் (legality) என்ற புற்றுநோயால் அரிக்கப்பட்டு, நாடாளுமன்றச் சூழலால் களங்கப்பட்டுப் போய் நடைமுறையொழுங்கை வழிபடுபவர்களும், சொகுசான பதவிகளுக்கும் தன்பமில்லாத வேலைகளுக்குப் பழக்கப்பட்டுப்போன அதிகாரவர்க்கத்தினரும் அடங்குவர். வரலாற்றுரீதியாகவும் பொருளாதார



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ரீதியாகவும் பார்க்கும்பொழுது இவர்கள் ஒரு தனி வேறான சமூக அடுக்கைச் சேர்ந்தவர்களல்லர்; மாறாக தொழிலாளி வர்க்க இயக்கத்தின் ஒரு பழைய கட்டத்தி லிருநது ஒரு புதிய கட்டத்தை நோக்கி மாறும் ஓர் இடைக்கால நிலையைப் பிரதிநிதித்துவப்படுத்துகின் றனர். அதாவது 1871க்கும் 1914க்கும் இடைப்பட்ட கால கட்டத்திலிருந்து, குறிப்பாக மிகமிகப் பரந்த அளவில் நிதானமாகவும் இடைவிடாது முறையாகவும் ஸ்தாபனப் பணியைச் செய்யும் இன்றியமையாக் கலையைப் பாட்டாளி வர்க்கத்திற்குக் கற்றுத் தந்த கட்டத்தி லிருந்து முதல் உலகப்போர் வெடித்த பின் மெய் யாகவே இன்றியமையாததாகிவிட்ட சமூகப் புரட்சி சகாப்தத்தைத் துவக்கி வைத்த புதிய கட்டத்துக்குச் செல்லும் இடைநிலையைப் பிரதிநிதித்துவப்படுத்து கின்றனர்.

இந்த "நடுநிலை" யாளர்களின் முதன்மையான தலை வரும் பிரதிநிதியும் இரண்டாம் அகிலத்தின் (1889-1914) மிகச் சிறந்த நிபுணருமான கார்ல் கவுட்ஸ்கியா வார். இவர் 1914 ஆகஸ்டுக்குப் பிறகு, மார்க்சியத்தில் சுத்த ஞானசூன்யமாகிவிட்டதற்கான ஒரு முன்மாதிரி யாகவும் முன்னெப்போதும் கேட்டிராத கோழைத் தனம், படுகேவலமான ஊசலாட்டங்கள் ஆகியவற்றின் மொத்த உருவாகவும் ஆகிவிட்டவர்......

சில சமயங்களில், தனி மனிதர்கள் சமூக-தேசிய வெறி நிலையிலிருந்து "நடுநிலை"க்கும் அதேபோல "நடுநிலை"யிலிருந்து சமூக-தேசிய வெறி நிலைக்கும் தம்மையறியாமலேயே செல்வது இயல்பு. தனிமனிதர் கள் ஒரு வர்க்கத்திலிருந்து மற்றொரு வர்க்கத்திற்கு சுதந்திரமாக செல்லக்கூடும் என்றபோதிலும், வர்க்கங் கள் ஒன்றுக்கொன்று தனித்து வேறுபட்டு நிற்பவை என்பதை ஒவ்வொரு மார்க்சியவாதியும் அறிவார்; அதே போல தனிமனிதர்கள் ஒரு போக்கிலிருந்து மற்றொரு



போக்கிற்கு சுதந்திரமாக மாறக்கூடும் என்றபோதிலும், போக்குகளை ஒன்றிணைப்பதற்கு முயற்சிகளும்ஆயத்தங் களும் இருந்தபோதிலும், அரசியல் வாழ்வில் போக்குகள் என்பன ஒன்றுக்கொன்று தனித்து வேறுபட்டு நிற்பவை என்பவையும் அவர் அறிவார்.

3. மூன்றாவது போக்கு, உண்மையான சர்வ தேசியவாதி களின் போக்காகும். இதைச் சிறப்பாகப் பிரதிநிதித்து வம் செய்பவர்கள் "ஸிம்மர்வால்ட் இடதுசாரியினர்"...

இதனை வேறுபடுத்திக் காட்டும் அம்சம், சமூக—தேசியவெறி, "நடுநிலை" என்ற இரண்டிலிருந்தும் இது தன்னை முழுமையாக முறித்துக்கொண்டதும், தனது சொந்த நாட்டு ஏகாதிபத்திய முதலாளி வர்க்கத் துக்கும் எதிரான இதன் தீரமிக்கப் புரட்சிகரப் போராட் டமும் ஆகும். "நமது முதன்மையான எதிரிகள் உள் நாட்டில்தான்" என்பதுதான் இதன் கோட்பாடாகும். இது தேன் தடவிய சமூக—அமைதிவாத சொற்றொடர் களுக்கு [சமூக-அமைதிவாதி (Social-pacifist) என்ப வன் சொல்லில் சோசலிசமும் செயலில் முதலாளிய அமைதிவாதமும் கடைப்பிடிப்பவன்; மூலதனத்தின் அடிமைத்தளையையும் ஆதிக்கத்தையும் தூக்கியெறியா மலேயே நீடித்த அமைதியை உருவாக்கக் கனவு காண் பவன்] எதிராக ஓர் இரக்கமற்ற போராட்டத்தை நடத்துகிறது; இன்றைய போருடன் தொடர்புபடுத்த ஒரு பாட்டாளி வர்க்கப் புரட்சியை நடத்துவது சாத்திய மானது, பொருத்தமானது காலத்துக்குரியது என்பதை மறுப்பதற்குப் பயன்படுத்தப்படும் எல்லாவகையான சூழ்ச்சிகளுக்கும் எதிராக ஈவிரக்கமின்றிப் போராடு கிறது.

ஜெர்மனியில் இந்தப் போக்கின் தலைசிறந்த பிரதி நிதியாக இருப்பது ஸ்பார்டகஸ் குழு அல்லது "இன்டர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நேஷனல்'' குழு என்று சொல்லப்படுவது ஆகும். கார்ல் லீப்னெக்ட் இக்குழுவைச் சேர்ந்தவர். இவர் இந்தப் போக்கினதும் புதிய உண்மையான, பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தினதும் மிகப் புகழ்பெற்ற பிரதிநிதி யாவார்.

தமது சொந்த நாட்டு அரசாங்கத்துக்கு எதிராகவே தமது துப்பாக்கியத்தைத் திருப்பவேண்டும் என்று கார்ல் லீப்னெக்ட் ஜெர்மானியத் தொழிலாளர்களுக்கும் படை வீரர்களுக்கும் அறைகூவல் விடுத்தார். இதை அவர் வெளிப்படையாக நாடாளுமன்றத்தின் மேடையிலிருந்தே செய்தார். அதன் பிறகு அவர் பெர்லின் நகரத்திலேயே மிகப்பெரிய சதுக்கங்களில் ஒன்றான போஸ்டாமர் சதுக்கத்தில் நடந்துகொண்டிருந்த ஒரு ஆர்ப்பாட்டத்தில் ''அரசாங்கம் வீழ்க'' என்ற முழக்கம் அடங்கிய ரகசியமாக அச்சிடப்பட்ட பிரசுரங்களுடன் சென்றார். அவர் கைது செய்யப்பட்டு கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டார். இப்பொழுது அவர் தமது போர்-எதிர்ப்பு நடவடிக்கைக்காக சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் நூற்றுக்கணக்கான உண்மையான ஜெர்மன் சோசலிசவாதிகளுடன் ஜெர்மன் சிறையில் சிறைத் தண்டனை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்.

கார்ல் லீப்னெக்ட் தனது பேச்சுக்களிலும் எழுத்துக்களிலும் தனது சொந்த நாட்டு பிளக்கனோவ்களுக்கும் பத்ரேசெவ்களுக்கும் (ஷைடெமான்கள், லெஜியென்கள், டேவிட் வகையறாக்கள்) எதிராக மட்டுமல்லாது தனது சொந்த நாட்டு நடுநிலையர்களுக்கும் சொந்த நாட்டு செகெய்ட்ஸெக்கள், த்ஸெரெத்தெலிகள் (கவுட்ஸ்கி, ஹாஸே, லெடபௌர் வகையறா) ஆகியோருக்கு எதிராகவும் கூட தயவு தாட்சண்யமற்ற தாக்குதல்களை நடத்தினார்.

நாடாளுமன்றத்தில் உள்ள நூற்றுப்பத்து சமூக—ஜனநாயகப் பிரதிநிதிகளில் கார்ல் லீப்னெக்ட், ஓட்டோ ரூல் ஆகிய இருவர் மட்டுமே கட்டுப்பாட்டை மீறி, ''நடுநிலை'' யாளர்களுடனும் தேசிய வெறியர்களுடனுமான



ஒற்றுமையை உடைத்தெறிந்து அவர்கள் அனைவர்க்கும் எதிராகச் சென்றார். லீப்னெக்ட் மட்டுமே சோசலிசத்தையும் பாட்டாளி வர்க்கப் புரட்சியையும் பிரதிநிதித்துவம் செய்கிறார். (ஸ்பார்டகஸ் குழுவின் உறுப்பினரும் அதன் தலைவர்களில் ஒருவரான) ரோசா லம்சம்பர்க்கின் பொருத்தமான வார்த்தைகளில் கூறினால் ஜெர்மன் சமூக—ஜனநாயக இயக்கத்திலுள்ள பிற எல்லாருமே ''நாற்றமெடுக்கும் பிணம்'' தான்.

இது கருத்துச் சாயைகள் (shades of opinion) பற்றிய பிரச்சனை அல்ல. இவை இடதுசாரிகளிடமும் இருக்கவே செய்கின்றன. இது போக்கு பற்றிய பிரச்சனை ஆகும். ஒரு பயங்கரமான ஏகாதிபத்தியப் போர் நடந்து கொண்டிருக்கும் சமயத்தில் செயலில் சர்வ தேசியவாதியாக இருப்பது என்பதுதான் விஷயம். இத்தகைய நபர்கள் மிகச் சிலரே; ஆனால் இத்தகையவர்களை மட்டுமே சோலிசத்தின் எதிர்காலம் சார்ந்திருக்கிறது; இவர்கள் மட்டுமே மக்களின் தலைவர்கள்; மக்களைக் கெடுப்பவர்கள் அல்ல.

சமூக-ஜனநாயகவாதிகளிடையேயும், பொதுவாக சோசலிசவாதிகளிடையேயும் உள்ள சீர்த்திருத்தவாதிகளையும் புரட்சிவாதிகளையும் பிரித்துக்காட்டும் வேற்றுமை ஏகாதிபத்தியப் போர் நிலைமைகளில் ஒரு மாறுதலைடைவது திண்ணம். முதலாளிய அரசாங்கங்கள் சமாதானத்துக்கு உடன்பட வேண்டுமென்றோ அல்லது ''சமாதானத்தைப்பற்றி மக்களின் சித்தத்தை அறிய வேண்டும்'' என்றோ ''கோருவதுடன்'' நிறுத்திக் கொள்பவர்கள் உண்மையில் சீர்திருத்தப் பாதையில் நழுவிச் செல்கின்றனர். ஏனெனில் புறநிலையில் போர் என்ற பிரச்சனைக்கு ஒரு புரட்சிகர வழியில்தான் தீர்வு காணமுடியும்.

இந்தப் போரின் மூலம் பெருஞ்செல்வர்களாகியுள்ள முதலாளிகளுக்குக் கோடிக்கணக்கில் வட்டியைக் கொடுக்கும் சுமையிலிருந்து மக்கள்விடுதலை பெறுவது என்பதோ, ஒரு ஜனநாயகரீதியான, நிர்ப்பந்தமற்ற சமாதானத்தில் இந்தப் போரை முடிவுக்குக் கொண்டு வருவதோ ஒரு பாட்டாளிவர்க்கப் புரட்சியினால் அல்லாது, வேறு எந்த வழியிலும் சாத்தியமல்ல.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

..................................

கவுட்ஸ்கியவாதிகளும், ''நடுநிலை'' யாளர்களும் சொல்லளவில் புரட்சியாளர்கள்; செயலில் சீர்திருத்த வாதிகள்; சொல்லளவில் சர்வதேசியவாதிகள், செயலளவில் சமூக— தேசிய வெறியர்களின் கூட்டாளிகள்.

**இரண்டாவது அகிலத்தின் தகர்வும்— ஒரு மூன்றாவது அகிலத்தை நிறுவுவதற்கான தேவையும்**

17. ..........................................

..................................................

எத்தனை பேர்கள் என்பதல்ல பிரச்சனை, உண்மையான பாட்டாளிவர்க்கத்தின் கருத்துக்களையும் கொள்கைகளையும் சரியாக வெளிப்படுத்துவதுதான் பிரச்சனை. ''சர்வதேசியத்தை'' பிரகடனப்படுத்துவதல்ல விஷயம்; மிக சோதனைமிக்க காலங்களிலும் கூட சர்வதேசியவாதியாக இருக்க முடிவதுதான் விஷயம்.

(1917 செப்டம்பரில் இக்கட்டுரை ருஷ்யாவிலுள்ள ப்ரிபோய் பதிப்பகத்தாரால் சிறுபிரசுரமாக வெளியிடப்பட்டது. இக்கட்டுரையின் ஆங்கில மொழிபெயர்ப்பிலிருந்து சில பகுதிகள் கீழ்க்காணும் நூலில் இடம் பெற்றுள்ளன; V. I. Lenin, 'Against Revisionism, Progress Publishers, Moscow, 1972, பக்கங்கள் 342—352. இவற்றிலிருந்தே இம்மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது—மொழி பெயர்ப்பாளர்.) ○

## எமது வெளியீடுகள்

- ☐ ஈழப்பிரச்சினை : அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கைகளில் இந்திய அரசு — ரூ 1 00
- ☐ நிகரகுவா-ஒரு அசலான புரட்சி — ரூ 0 50
- ☐ ஈழமும் இந்தியப் பேரரசும் — ரூ 1 00
- ☐ இந்து சமுத்திரப் பிராந்தியமும் இலங்கை இனப்பிரச்சினையும் (182 பக்கங்கள்) — ரூ 15 00

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யுத்தவெறி எஜமானர்களே!
துப்பாக்கிகளையும்
சாவு விமானங்களையும்
பெருங்குண்டுகளையும்
கட்டியமைத்து விட்டு
சுவர்களுக்குப் பின்னால்
மேஜைகளுக்குப் பின்னால்
ஒளிந்து கொண்டவர்களே!
உங்கள் காதுகளுக்கு எட்டுமாறு சொல்லிக்கொள்வேன்!
முகமூடிகளினூடே
உங்களை
நான் அடையாளம் கண்டு விட்டேன்!

—வியட்நாமில் அமெரிக்க இராணுவ ஆக்கிரமிப்பை எதிர்த்து அமெரிக்கப் பாடகர் பாப் டைலன்
(1963)

அச்சிட்டோர் :
விசாலம் பிரிண்டிங் ஹவுஸ், சென்னை-24

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்